For private circulation only

Book Post

https://christianhistoricalsociety.in/

# கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்

மார்ச் 2024

திசை தெரியாமல் திகைக்காதிருக்க திருச்சபை வரலாறு தெரியவேண்டும்

விலை : ரூ 60 • இதழ் 46

‘பூர்வ நாட்களில்
நீர் நடத்தி வந்த கிரியைகளை
எங்கள் பிதாக்கள் சொல்லக் கேட்டோம்’.
(சங்.44:1)

‘ஒருவன் எனக்குத் தெரிவிக்காவிடில் அது
எனக்கு எப்படித் தெரியும்’.
(அப். 8:31)




சாந்தோம் பசிலிக்கா பேராலயம், சென்னை

# ஆசிரியர் சுவடு

"பூர்வ நாட்களில் நீர் நடத்தி வந்த கிரியைகளை எங்கள் பிதாக்கள் சொல்லக் கேட்டோம்." (சங். 44:1)
"ஒருவன் எனக்குத் தெரிவிக்காவிடில் அது எனக்கு எப்படித் தெரியும்" (அப். 8:31)

இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

வேதத்தை நாம் படித்து வரும் அதே வேளையில் திருச்சபை, மிஷன் சரித்திரங்களையும் மறக்காமல் தெரிந்து கொள்ளுவது நலம். வேத உபதேசங்கள் அனைத்தும் நம்முடைய வாழ்க்கையில் கொண்டுவர வல்லன என்பதை இச்சரித்திரங்கள் தானே நிருபித்து காட்டுகின்றன. கிறிஸ்தவத் தொண்டர்களுக்கு இவைகளைப் பற்றிய வரலாற்றுச் அறிவு இன்னும் தேவை என்பது நமது கருத்து.

திராவிட மொழிகள் குறித்து கால்டுவெல் எழுதிய நூல் போலியானது என்றும், ஜி.யு. போப்பும் கால்டுவெல்லும் பள்ளிப்படிப்பை கூட முடிக்காதவர்கள் என்று உயர் பதவிகளில் இருக்கின்றவர்கள் வாய் கூசாமல் பொய் பேசி வருகின்றனர். அவர்களுக்கு நாம் நிரூபிக்க வேண்டிய அவசியம் நமக்கில்லை. எதை ஒழிக்க நமக்கு கல்வி அவசியம் என்று தங்களை தியாகம் செய்தார்களோ அதை தமிழக மக்கள் நன்கறிவர்.

நாம் செய்ய வேண்டியது மிஷன் சரித்திரங்களை திருச்சபை மக்களுக்கும், தமிழக மக்களுக்கும் கொண்டு செல்லவேண்டியது. எனவே கட்டுரை ஆசிரியர்கள் இதுவரையிலும் நம்முடைய மாத இதழில் வெளி வராத கட்டுரைகளை எழுதவும், மக்கள் இன்றும் கேள்விப்படாத நிலையில் உள்ள வரலாற்று சம்பவங்களை கொண்டு செல்லும் நோக்கில் ஜெபத்துடனும், தரிசனத்துடனும் எழுத அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இம் மாத ஆய்விதழை வாசகர்களாகிய நீங்கள் உங்கள் நண்பர்கள், உறவினர்களுக்கு அறிமுகப்படுத்த அன்போடு கூட கேட்டுக் கொள்ளுகின்றேன். ஒவ்வொரு மாதமும் இவ்விதழை வெளியிடுவதற்கு மிகுந்த பொருட்செலவுகள் உண்டு, மாத சந்தாவை புதுப்பித்து கொள்ளும்படி அன்புடன் நினைவுபடுத்துகிறேன். முடியுமானால் காணிக்கையாகவோ அல்லது நன்கொடையாகவோ கொடுத்து தாங்க அன்போடு கூட கேட்டுக் கொள்ளுகின்றேன்.

பாரபரனின் பணியில்
*Manna Selvakumar*

+91 91767 80001

G Pay

கிறிஸ்தவ
# வரலாற்றுச் சுவடுகள்

மாத ஆய்விதழ் சந்தா விபரம்

| சந்தா விபரம் | உள்நாடு |
|---|---|
| தனிப்பிரதி | ₹ 60 + நன்கொடை |
| ஆண்டு சந்தா | ₹ 600 + நன்கொடை |
| ஐந்து ஆண்டு சந்தா | ₹ 3000 + நன்கொடை |

"கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்"
மாத ஆய்விதழை நீங்கள் தொடர்ந்து பெற்றுக் கொள்ள
**G-Pay** மூலம் செலுத்த
91767 80001 என்ற எண்ணுக்கு செலுத்தவும்
காசோலை மற்றும் வரைவோலை செலுத்த
'கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்'
( Christian Historical Society )
என்ற பெயரில் எடுக்கவும்

Name : Christian Historical Society
A/c Number : 1748 020000 4906
Bank name : Federal Bank
IFSC code : FDRL0001748

BANK

Contact Us


**கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்,**
கதவு எண் 2-2-3(4), வடக்குத்தெரு,
பங்களாச் சுரண்டை-627859,
தென்காசி மாவட்டம் (தமிழ்நாடு)
04633 290401, 91767 80001


சந்தா விபரங்கள் இதழின் உள்ளே,
இது ஒரு வரலாற்றுச் சங்க உறுப்பினர்களுக்கான பதிப்பு..


**மன்னா செல்வகுமார்** — ஆசிரியர்
**சுஜித் ரெக்ஸ்** — வடிவமைப்பு

christianhistoricalsociety.in
tchsportal.co.in
christianhistorical@gmail.com



# பரிசுத்த தோமா கால் பதித்த இடங்கள்!

சாந்தோம் பசிலிக்கா பேராலயம், சென்னை

**பேசும் பொம்மை ஷாந்தகுமார்**
சென்னை

என் குடும்பத்துடன் நான் ஏப்ரல் 2017-இல் எருசலேமுக்கு புனிதப் பயணம் சென்று வந்தேன். அடுத்த மாதமே, நான் அங்கத்தினராக இருக்கும் சாந்தோமில் உள்ள சி.எஸ்.ஐ. பரிசுத்த தோமா ஆங்கில ஆலயத்தில் அழைப்பு விடுத்தார்கள். அதாவது பரிசுத்த தோமா சென்னையில் கால் பதித்த முக்கியமான மூன்று இடங்களைச் சுற்றிப் பார்க்கலாமென்று! நானும் கிளம்பி விட்டேன்.

## சாந்தோம் பஸிலிகா பேராலயம்:

இது 1523-இல் போர்ச்சுக்கீசிய ஆராய்ச்சியாளர்களும், போதகர்களும் பரிசுத்த தோமாவின் கல்லறைக்கு மேல் ஆலயத்தைக் கட்டி, கிழக்கு கடற்கரையோரமான இவ்விடத்திற்கு சாந்தோம் எனப் பெயரிட்டனர். 1893-இல் மீண்டும் புதிய கோதிக் பாணியில் தற்பொழுது இருக்கும் கட்டுமானத்தில் புதுப்பிக்கப்பட்டு, கதீட்ரல் என ஆங்கிலேயர்களால் அழைக்கப்பட்டது.

இக்கத்தீட்ரலில் உள்ள அழகிய வண்ணக் கண்ணாடி ஜன்னல்களில் உள்ள காட்சிகள் பரிசுத்த தோமாவின் வாழ்வில் நடந்த சம்பவங்களை அழகாக படம் பிடித்துக் காட்டுகின்றன. சுவரில் தொங்கும் மரத் தகடுகள் மூலம் இயேசுவின் கடைசி நாட்களின் காட்சிகள் விளக்கப்பட்டிருக்கின்றன. ஆல்டரில் ஆச்சரியப்படத்தக்க விதமாய் பிரகாசிக்கும் வண்ணங்களின் மூலம் செம்மையாக அலங்காரம் செய்யப்பட்டுள்ளது.

இந்த ஆலயம்தான் தமிழ் நாட்டின் மிகவும் உயரமான ஆலயம். ஆம்! இதன் உயரம் 180 அடி; ஆங்கிலேயர்கள் புதுப்பித்து, 130 வருடங்களைக் கடந்தாலும் கடற்கரையின் அழகுக்கே அழகு சேர்க்கும் விதமாக இவ்வாலயம் அமைந்துள்ளது.

## தோமாவின் சுருக்கமான வரலாறு:

தோமா இந்தியாவில் கிறித்தவ மதத்தை முதன் முதலாகப் பரப்பித் தன்னுடைய உயிரையே தியாகம் செய்ததால், அவரை **'இந்தியாவின் பரிசுத்தக் காப்பாளன்'** என்று அழைக்கப்படுகிறார்.

தோமா அவர்கள் கி.பி. 52-இல் அப்பொழுதுள்ள ரோம் நாட்டின் யூதேயாவிலிருந்து புறப்பட்டு சிரியா மற்றும் பெர்ஷியா நாடுகளில் ஊழியம் செய்து விட்டு, கேரளக் கடற்கரையில் உள்ள சேர நாட்டின் முசிறி எனும் இடத்திற்கு வந்து இறங்கினார். புனித தோமாவின் இந்திய அப்போஸ்தல ஊழியம் கி.பி. 52 முதல் கி.பி. 68 வரை மலபார் கரையில் உள்ள க்ராங்கனூர் (தற்சமயம் கொடுங்கல்லூர் என அழைக்கப்படுகிறது) எனும் இடத்திலிருந்து ஆரம்பித்தது.

கேரளாவில் முக்கியமாகக் கீழ்க்கண்ட ஏழு இடங்களில் ஆலயங்கள் எழுப்பப்பட்டன: 1) பாலயூர் 2) கொக்கமங்கலம் 3) கொடுங்கல்லூர் 4) பரவூர் (கொட்டக்காவு) 5) நிரானம் 6) நிலாக்கல் மற்றும் 7) கொல்லம் (கொய்லான்). இவரைப் பின்பற்றியவர்களை, தாமஸ் கிறித்தவர்கள் அல்லது தாமஸ் சீரியக் கிறித்தவர்கள் என அழைக்கிறார்கள்.

## இந்தியாவின் முதல் ஆலயம்:

கி.பி. 63-இல், பரிசுத்த தோமா கன்னியாகுமரி மாவட்டத்தில் கட்டிய ஆலயத்தின் பெயர் திருவிதாங்கோடு அரப்பள்ளி அல்லது தோமையர் கோயில் அல்லது புனித



மேரியின் மரபு வழி ஆலயம்! அக்காலத்தில் நாட்டை ஆள்பவர்களை 'அரசர்' என்றும், அரசர்கள் தங்கிய இடத்தை 'அரண்மனை' என்றும் அழைப்பது போல, இந்த ஆலயத்தை அரசர்கள் காப்பாற்றி வந்ததால், அதனை அரப்பள்ளி என அழைத்தனர். இவ்வாலயத்தைச் சேர அரசராகிய நெடும் சேரலாதன் கட்டியதாகவும், மற்றொரு சேர அரசர் உதியன் சேரலாதன் இதனை 'அமலகிரி ஆலயம்' என அழைத்ததாகவும் கூறுவர்.

இன்னும் சிலர், **'அரை'** எனும் அர்த்தத்தில் இவ்வாலயத்தை அரப்பள்ளி என்று அழைக்கப்படுவதாகக் கூறுகிறார்கள். தோமா இதையும் சேர்த்து மொத்தம் ஏழரை ஆலயங்கள் கட்டியதாகக் கூறுவதுண்டு. மைலாப்பூரில் கிறித்தவர்களாக மாறிய 64 குடும்பங்களை அங்குள்ள எதிரிகளிடமிருந்து காப்பாற்றவே தோமா இங்கு அழைத்து வந்ததாகவும் கூறுகிறார்கள்.

இது துக்காலேவிலிருந்து 2 கிலோ மீட்டர் தூரத்திலும், நாகர்கோவிலில் இருந்து 20 கிலோ மீட்டர் தூரத்திலும் உள்ளது. இதனை 17-ஆம் மற்றும் 20-ஆம் நூற்றாண்டுகளில் புதுப்பித்திருந்தாலும், இது கட்டப்பட்ட பூர்வீக மூல பாணியை மாற்றாமல் உண்மையாகப் பராமரித்து வருகிறார்கள்.

மேலும், இவ்வாலயத்திற்கு அருகே உள்ள கிணறு பரிசுத்தத் தோமாவால் வெட்டப்பட்டது என்பது அக்காலத்திலிருந்து நமக்குக் கிடைத்த மற்றொரு செய்தி. இக்கிணற்றில் தண்ணீர் வற்றியதே கிடையாதாம் என்பது கூடுதல் வியப்பூட்டும் செய்தி.

இங்குள்ள பாரம்பரிய அருங்காட்சியகத்தில், சில கலைப் பொருட்கள், பழங்காலத்து மாவரைக்கும் கல், பல பழைய காசுகள், போர்ச்சுகீசியர்கள் வழங்கிய பரிசுப் பொருட்கள், முக்கியமாக 15-ஆம் நூற்றாண்டில் பேதுரு, பவுல், மற்றும் இரண்டு பறவைகளுடைய உருவங்களோடு செதுக்கப்பட்ட மர மேஜை போன்றவை அலங்கரிக்கின்றன. இந்த சரித்திரம் படைக்கும் ஆலயமும், புதியதாகக் கட்டப்பட்ட பரிசுத்த தோமாவின் பெயரில் உள்ள உலக நாடுகளின் யாத்திரை மையமும், தற்சமயம் மலங்காரா ஆர்த்தோடாக்ஸ் சிரியன் ஆலயத்துக்குட்பட்டவை.

கன்னியாகுமரியில் பரிசுத்த தோமா ஊழியம் செய்த காரணத்தால், இன்றும் தமிழ் நாட்டில் அதிகக் கிறித்தவர்கள் வாழும் மாவட்டமாக கன்னியாகுமரி திகழ்கிறது. ஆம்! அங்கே உள்ள ஜனத்தொகையில் கிறித்தவர்களின் விழுக்காடு 46%!



**என்னுடைய பொம்மை ஜானி:** 'அங்கிள்! இது எனக்கு ரொம்ப ஆச்சரியமா இருக்கு. மேலும் உடம்பெல்லாம் புல்லரிக்கிது! காரணம்... ஒண்ணு... இப்படிப்பட்ட ஆலயம் நிறையக் கிறித்தவர்களுக்கே தெரியாது. நெய்யூரில் உள்ள என் சொந்தக்காரர்களுக்கே தெரியலை. இந்நேரம், இவ்வாலயத்தைப் பத்தி எல்லாருக்கும் பரப்பி, மிகவும் புகழ் மிக்க இடமா மாத்தியிருக்கணும்.

'ரெண்டு' இந்தியாவில் வசிக்கும் 90 சதவீத மக்கள், கிறித்தவத்தை மேற்கு நாட்டு மதம் என்ற பொய் பிரசாரத்தைச் செய்து வருகிறார்கள். ஆனால் உண்மையான நிலவரம் என்னவென்றால், அமெரிக்கா, மற்றும் இங்கிலாந்து போன்ற முன்னேற்றமடைந்த மேற்கத்திய நாடுகளில் கிறித்தவம் பரவுவதற்கு முன்பே, அதாவது கி.பி. 63-ஆம் ஆண்டிலேயே கிறிஸ்துவின் சீடராகிய தோமாவால் இந்தியாவில் ஆலயம் எழுப்பப்பட்டுள்ளது. அது மட்டுமல்ல! நிறைய இந்திய மக்கள் கிறித்துவை ஆண்டவனாக முதல் நூற்றாண்டிலேயே ஏற்றுக் கொண்டுள்ளனர். இந்த ரெண்டு செய்தியுமே ஜாக்பாட் செய்திகள் அங்கிள்!"

## சென்னையில் தோமா:

பரிசுத்த தோமா 16 வருடங்கள் கேரளாவில் ஊழியம் செய்தார். பிறகு கி.பி. 68-ஆம் ஆண்டு சென்னையில் உள்ள மயிலாப்பூருக்கு பயணம் செய்தார்.

புனித தோமா மயிலாப்பூரிலும், லிட்டில் மௌண்ட் எனப்படும் சைதாப்பேட்டையிலும், மற்றும் பரங்கிமலையிலும் கடவுளுடைய வார்த்தையைப் பகிர்ந்து கொண்டார். மேலும், ஆவிகளை ஓட்டுதல், நோயாளிகளை, முக்கியமாகத் தொழுநோயாளிகளைக் குணப்படுத்துதல் போன்ற அதிசயங்களை நிகழ்த்தினார்.

தோமாவின் வார்த்தைகளைக் கேட்ட மஹாதேவா எனும் மயிலாப்பூர் அரசர் இயேசுவை ஏற்றுக் கொண்டார். அவரும், அவரைப் பின்பற்றுபவர்களில் ஒரு பகுதியினரும் கிறித்தவர்களாக மாறினர். இந்த நிகழ்வுகள் உயர் ஜாதியினரிடமும், அர்ச்சகர்களிடமும் விரோதத்தையும், பொறாமையையும், உருவாக்கியதால், பரிசுத்த தோமாவைக் கொலை செய்ய அவர்கள் வகை தேடினார்கள். (மஹாதேவனின் மகனுடைய நோயைக் குணப்படுத்த தோமாவின் கல்லறையை முதல் முறையாகத் திறந்ததாகப் புனித க்ரிகரியின் பயணத்தின்போது அவர் எழுதிய '**புனித தோமா எனும் அதிசயம்**' எனும் புத்தகத்தில் கூறப்பட்டிருக்கிறது.)

ஒரு முறை, சைதாப்பேட்டையில் உள்ள குகையில் தோமா தங்கியிருந்தபோது, தன்னைக் கொல்ல சில ஆட்கள் வருவதை அறிந்து, குகையின் பின்னால் உள்ள ஜன்னலை உடைத்துக் கொண்டு, அதன் வழியே தப்பினார்.

பிறகு ஒரு நாள் பரிசுத்த தோமா, பரங்கி மலையில் அவர் செதுக்கிய சிலுவைக்கு முன்பாக எப்பொழுதும் போல, பிரார்த்தனை செய்து கொண்டிருக்கும்போது, பின் புறமாக வந்த கொலையாளி, அவரை ஈட்டியால் குத்திக் கொலை செய்தார். அவர் முன்னாலிருந்த சிலுவையை அணைத்தவாறு மரணித்தார்.

தோமாவைக் கொலை செய்த பிறகு, அவருடைய

பூத உடலை இப்பொழுது சாந்தோமில் கதீட்ரல் பஸிலிகா கட்டப்பட்டுள்ள இடத்தில் புதைத்தனர். கி.பி. பத்தாம் நூற்றாண்டில், பெர்ஷியாவிலிருந்து வந்த நெஸ்டோரியக் கிறித்தவர்கள் கூட்டமாக சாந்தோமுக்கு வந்து, அக்கல்லறைக்கு மேலே ஒரு ஆலயத்தை எழுப்பினார்கள்.

இத்தாலியிலிருந்து வந்த பயணியான மார்க்கோ போலோ, "மார்க்கோ போலோவின் பயணம்!" எனும் தன்னுடைய புத்தகத்தில் 1293-இல் தான் சாந்தோமுக்கு வந்தது பற்றியும், புனித தோமாவின் கல்லறையில் பயன்படுத்திய மண் பல வியாதிகளைக் குணப்படுத்தும் அதிசயச் சக்தி வாய்ந்தது பற்றியும் விளக்கமாக எழுதியுள்ளார்.

மேலும் அப்புத்தகத்தில் நாம் இப்பொழுது பயன்படுத்தும் கடன் அட்டையைப் போல, நினைவு அட்டைகளை விலைக்கு விற்றதாகவும் விளக்கியுள்ளார். தோமா கொலை செய்யப்பட்ட பரங்கி மலையிலிருந்து எடுக்கப்பட்ட மண்ணின் மாதிரியை அந்த நினைவு அட்டைகளில் அடைத்து வைத்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.

பதினான்காம், மற்றும் பதினைந்தாம் நூற்றாண்டுகளில், சாந்தோம் ஆலயக் கட்டடம் அழியத் தொடங்கியது. 1523-இல், போர்ச்சுக்கீசியர்கள் தோமாவின் உடலை எடுத்து, ஆலயத்தின் ஒரு புதிய கல்லறையில் வைத்தனர். இதனால் 1606-இல் அந்த ஆலயம் கதீட்ரல் எனும் அந்தஸ்தைப் பெற்றது.

1662-இலிருந்து 1780 வரை சாந்தோமும், பிற இடங்களும் கோல்கொண்டா அரசின் கீழ் ஆளப்பட்டதால், சாந்தோம் ஆலயம் 118 ஆண்டுகளாக, பாதுகாப்பு இல்லாமலும், நம்பகத்தன்மை இல்லாமலும் இருந்தது. 1892-இல், மயிலாப்பூரின் பிஷப் அவர்கள் பழைய ஆலயத்தை இடித்துவிட்டு, தோமாவின் கல்லறைக்கு மேல் ஒரு புதிய ஆலயம் கட்டத் தீர்மானித்தார். அந்த ஆலயம் 1896-இல் கட்டி முடிக்கப் பட்டது. 1893-இல் கோதிக் பாணியில் ஆங்கிலேயர்கள்தான் இவ்வாலயத்தைக் கட்டினார்கள் என்றும் சிலர் கூறுகிறார்கள்.

மெட்ராஸின் ரோமன் கத்தோலிக்க ஆர்ச் டயாசிஸைக் கௌரவிக்கும் வண்ணம் போப் பயஸ் XII அவர்கள் 1956-இல் மைனர் **பாஸிலிகா** எனும் அந்தஸ்துக்கு இவ்வாலயத்தை உயர்த்தினார்கள். இவ்வாலயத்தில் இருக்கும் 'எங்கள் மயிலாப்பூரின் அன்னை' எனும் மேரி மாதாவின் சிலையை அதிக மக்கள் ஆவல் உந்தத் தொழுகை புரிந்ததாலும், மேலும் மக்களுடைய ஐக்கியம் ஆண்டவரோடு வலுப்பட்டதாலும், இந்த ஆலய அந்தஸ்து உயர்வு பெற்றது.

எஞ்சியிருந்த புனித தோமாவின் பூத உடலை ஏசியா மைனரில் உள்ள எடிஸ்ஸா எனும் இடத்திற்கும், பிறகு இத்தாலியில் இருக்கும் ஓர்டோனா எனும் இடத்தில் உள்ள சான் தாம்மோஸோ பாஸிலிகாவின் உள்ளே இருந்த வெள்ளி அலங்காரப் பெட்டியிலும் வைக்கப்பட்டது. சாந்தோம் கல்லறை முன்பு வைக்கப்பட்டிருந்த பாஸிலிகாவின் பின்பக்கத்தில் ஒரு சூரியக் கடிகாரம் பொருத்தப்பட்டது.

கத்தோலிக்க பிஷப் மாநாட்டில் இந்த கதீட்ரல் ஆலயத்தை நமது நாட்டின் கோயில் சன்னதி (ஷ்ரைன்) என அறிவிக்கப்பட்டது. இவ்வாலயத்தில் இருக்கும் மேரி மாதாவின் சிலை போர்ச்சுக்கல் நாட்டிலிருந்து வந்ததாக நம்பப்படுகிறது. உலகில் பல நாடுகளிலிருந்து சமாதானத்திற்காகவும், மன அமைதிக்காகவும் பல ஜாதி மக்கள் இந்தப் பஸிலிகாவைப் பார்வையிட வருகிறார்கள். இந்த ஆலயத்துடன் ஒரு அருங்காட்சியகமும் இயங்குகிறது.

## அருங்காட்சியகமும், தொன்மையானப் பொருட்களும்:

முதன் முதலாக, போர்ச்சுக்கீசியர்கள் இந்த இடத்தைத் தோண்டி ஆராயும்போது, ஒரு ஈட்டியின் தலையும், புனிதரின் எலும்புகளும் கண்டெடுக்கப்பட்டன. ஒரு அரிய சிறிய கை எலும்பும், தோமாவைத் தாக்கிய ஈட்டியின் தலையும் அருங்காட்சியகத்தை அலங்கரிக்கின்றன.

மேலும் அருங்காட்சியகத்தில், இரத்தம் உறைந்த தரையும், சீஷரின் கை ரேகையும், புனிதர் பயன்படுத்திய நாற்காலியும், கல்லாலான பாத்திரமும், மற்றும் புனிதரின் வாழ்க்கையை விவரிக்கும் சுவர் சித்திரங்களும் கண்காட்சிப் பொருட்களாக வைக்கப்பட்டுள்ளன. அவருடைய வாழ்க்கையை விவரிக்கும் ஒரு குறும்படம் இங்குள்ள ஒரு சிறிய அரங்கத்தில் திரையிடப்படுகிறது.

சாந்தோம் பஸிலிகாவின் பின் புறத்தில் உள்ள கடற்கரையில் ஒரு உயரமான கம்பத்தை நட்ட பிறகு, புனித தோமா மக்களிடம், 'கடலிலிருந்து கரையை நோக்கி வரும் எந்தப் புயலும், சூறாவளியும், எவ்வளவு பெரிய வெள்ளத்தை உருவாக்கினாலும், அது இக்கம்பத்தைத் தாண்டாது!' என்றார்.

அவர் சொன்ன விதமாகவே டிசம்பர், 2004-இல் உருவான சுனாமியினால் ஏற்பட்ட வெள்ளம் இக்கம்பத்தைத் தாண்டவில்லை. இக்கம்பத்தை 'சாந்தோம் கம்பம்' என உள்ளூர் மக்கள் அழைக்கிறார்கள்.

## தோமாவும், அன்னையின் நல்லாரோக்கிய ஆலயமும்:

அடுத்ததாக சென்னைக்கு மத்தியில் உள்ள சைதாப்பேட்டையில் அமைந்திருக்கும் மாதாவின் நல்லாரோக்கிய ஆலயத்துக்குச் சென்றோம். இது சின்ன மலையில் உள்ள சைதாப்பேட்டை கோர்ட்டுக்குப் பின்புறத்தில் உள்ளது.

இந்த ஆலயத்திற்கு சற்றே பின்னால் ஒரு குகை இருக்கிறது. தோமா பிரார்த்தனை செய்யவும், கடவுளைத் தியானிக்கவும் இக்குகை பயன்படுத்தப்பட்டு வந்தது. மேலும் அவரைச் சந்திக்க வரும் மக்களுக்கு இக்குகையின் அருகில் அமர்ந்து உபதேசம் செய்வது அவருக்கு வழக்கமாயிருந்தது. கீழேயுள்ள படத்தில் உள்ள கல்லின்படி, மைலாப்புரத்தின் ராஜா மஹா திவானுடைய ஆட்களால் கொலை செய்வதற்கு முன்பு, இக்குகையில் அவர் ஒளிந்திருந்தார்.

தோமாவுக்கும், அவரை நாடி வரும் மக்களுக்கும் குடிக்கும் நீர் அத்யாவசியத் தேவையாக இருந்தது. குகையில் ஒரு நாள் முழங்காலிட்டு, பிரார்த்தனை செய்த தோமா, தன் கையில் வைத்திருந்த தடியால் அங்குள்ள பாறாங்கல்லைத் தட்டியவுடன் அதனுள்ளே இருந்த ஒரு ஊற்றிலிருந்து தண்ணீர் வெளியேறியது. இந்த ஊற்று அனைவருடைய தாகத்தையும் தணித்தது; மேலும் சிலருடைய பிணியையும் போக்கியது. இந்த ஊற்று இன்றும் இருக்கிறதைப் பார்க்கலாம். இவ்வூற்றைத்



அன்னையின் நல்லாரோக்கிய ஆலயம்

தோமாவின் குணமாக்கும் நீரூற்று என அழைக்கிறார்கள்.

ஒருமுறை கொலை செய்ய வந்திருந்த எதிரிகளிடமிருந்து தோமா குகைக்குப் பின்பக்கத்தில் உள்ள சன்னலை உடைத்துக் கொண்டு அதன் வழியாகத் தப்பி விட்டார். 1551-இல் இங்கு வந்த போர்ச்சுகீசியர்கள், இவ்விடத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து, அன்னையின் நல்லாரோக்கிய ஆலயத்தைக் கட்டினார்கள்.

சமீப காலத்தில், இந்த ஆலயத்துக்கும், குகைக்கும் பின்புறத்தில் உள்ள அகண்ட நிலத்தை செம்மைப்படுத்தி சமமாக்கி ஒரு புனிதத் தலமாக மாற்றியுள்ளனர். இஸ்ரவேலில் இருப்பது போல சிலுவைப் பாதையில் உள்ள சிலுவையின் நிலையங்களை (ஸ்டேஷன்களை) உருவாக்கி உள்ளனர்.

சமீபத்தில், இவ்வாலயம் 'ஷ்ரைன்' எனும் நிலைக்கு உயர்த்தப்பட்டதால், இதனை ஆரோக்கிய அன்னையின் ஷ்ரைன் என அழைக்கிறார்கள். பரிசுத்த தோமா இறந்து 19 நூற்றாண்டுகளைக் கடந்த நிகழ்வை நினைவு கூறும்படியானச் செய்தியை இங்குள்ள ஒரு கல்லில் செதுக்கி வைத்துள்ளனர்.

## பரிசுத்த தோமாவின் பரங்கி மலை:



ஒரு நாள் பரிசுத்த தோமா, பரங்கி மலையில் எப்பொழுதும் போல, பிரார்த்தனை செய்து கொண்டிருந்த போது, பின் புறமாக வந்தக் கொலையாளி, அவரை ஈட்டியால் குத்திக் கொலை செய்தார்.

'அப்பொழுது தோமா மற்றச் சீஷர்களை நோக்கி: அ வ ரோ டே கூட மரிக்கும்படி நாமும் போவோம் வாருங்கள் என்றான்!' என்று தோமா யோவான் 11:16-இல் கூறியவாறே தன் உயிரைக் கொடுத்தார்.

1 5 2 3 - இ ல் அவர் இறந்த இடத்தில் 'எதிர்பார்க்கும் அன்னை' (Our Lady of Expectation) எனும் ஷ்ரைன் (ஆலயம்) கட்டப்பட்டது.

இம்மலையின் உச்சிக்குச் செல்ல 160 படிக்கட்டுகளைக் கடக்க வேண்டும். மலைப் படிக்கட்டுகளில் ஏறும்போதே சிலுவைப் பாதையைக் குறிக்கும் வகையில் சிலுவையின் 14 நிலையங்களை (ஸ்டேஷன்களை) நாம் பார்க்க முடியும். படிக்கட்டுகளைத் தவிர, சிறிய வாகனங்கள் செல்லக் கூடிய வேறு ஒரு மலைப் பாதையும் உண்டு.

இந்த ஆலயத்தில் குறிப்பிடும்படியாக பரிசுத்த தோமாவின் விரல் எலும்பின் படமும், பரிசுத்த லூக்கா வரைந்த மாதா மேரியின் உருவப் படமும் வைக்கப் பட்டுள்ளன.

## முடிவுரை:

வாஸ்கோ-டா-காமா நமது நாட்டுக்கு 1492-இல் வந்த போது, இந்தியாவில் உள்ள கிறித்தவர்களின் எண்ணிக்கை பத்து இலட்சமாக இருந்தது. அந்த எண்ணிக்கை 2001-இல் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி 2.40 கோடியாக மாறியது. இந்தியாவில் கிறித்தவ மதத்தின் இப்படிப்பட்ட அபரிதமான வளர்ச்சிக்கு ஒரு வலுவான அடித்தளத்தைக் கட்டமைத்தவர் பரிசுத்த தோமா.

அவருடைய உயிர்த் தியாகத்தைக் கேள்விப்பட்ட மற்ற சீடர்கள், 'நாமும் தோமாவைத் தொடர்ந்து உயிர்த் தியாகம் செய்வோம்!' என்று சொல்லி தங்கள் உயிரையே கொடுக்குமளவுக்கு வீறு கொண்டார்கள். உயிர்த் தியாகமும் செய்தார்கள்!

தோமா யோவான் 11:16-இல் சொன்னது போல், கல்வாரி மலையில் இயேசுவோடு உயிர் துறக்க விரும்பினார். ஆனால் சென்னையில் உள்ள பரங்கி மலையில் அவர் கிறிஸ்துவுக்காக உயிர் கொடுக்கும்போது இயேசு அவரோடு இருந்தார்.

பான்கிராஸ் எம். ராஜா எழுதிய 'ஓர் புதிய கண்டுபிடிப்பு: இந்தியாவில் கிறிஸ்துவின் சீடராகிய பரிசுத்த தோமாவின் முதல் ஊழியம்!' எனும் 428 பக்கங்கள் கொண்ட புத்தகத்தில் கீழ்க்கண்ட சரித்திர ஆசிரியர்களையும், அவர்கள் எழுதிய புத்தகங்களையும் மேற்கோள் காட்டி, தோமாவின் வருகையை உறுதிப்படுத்துகிறார். (இப்புத்தகம் அமேஸானில் கிடைக்கிறது.)

- 1927-இல் ஆயர் ஹென்றி ஹாஸ்டன் எஸ்.ஜே. என்பவர் எழுதிய 'சாந்தோம், மற்றும் மயிலாப்பூரில்

கிடைத்த தொன்மையானப் பொருட்கள்!'

- 1964-இல் ஜார்ஜ் மார்க் மோரேஸ் எழுதிய 'இந்தியாவில் கிறித்தவ சரித்திரம்!'
- 2008-இல் எஸ்.ஜே. ஜார்ஜ் நெடுங்காட் எழுதிய 'இந்தியாவில் சீடர் தோமாவின் சரித்திரம் பற்றித் தேடுதல்!'
- 2005-இல் ஜேம்ஸ் குரிகிலாம்கட் 264 பக்கங்களில் எழுதிய 'சீடர் தோமா இந்தியாவுக்கு மேற்கொண்ட முதல் பயணம்!' மற்றும் 1995-இல் அலெக்ஸ் க்ரூஸ் முத்தையா எழுதிய 'தெற்கு பாண்டிய அரசின் மானவீரா நாடு!' எனும் புத்தகத்தில் 132 முதல் 140 வரையில் உள்ள பக்கங்களில், தெற்கு பாண்டிய அரசர் காண்டப்பராஸா பரிசுத்த தோமாவிடமிருந்து ஞானஸ்நானம் பெற்றது பற்றி விவரிக்கப்பட்டுள்ளது.

புனித தோமா இறந்த தேதியை 3.7.72 என்று கணித்து, அந்தத் தேதியை 'இந்தியக் கிறித்தவத் தினம்' எனப் பெயரிட்டு நினைவு கூறுகிறார்கள்.

பரிசுத்த தோமாவின் கல்லறையை, இந்தியக் கிறித்தவ மதத்தின் கருவாக கிறித்தவர்கள் கருதுகிறார்கள். Yes,the Tomb of St. Thomas is the Womb of Christianity in India!

1972-இல் போப் பால் VI அவர்கள் பரிசுத்த தோமாவுக்கு 'இந்தியாவின் புரவலர் அப்போஸ்தலன்' (Patron Apostle of India) எனும் அந்தஸ்தை வழங்கினார். மேலும் போப் பால் VI இந்தியாவுக்கு முதல் முறையாக 1964-இல் வருகை தந்த போது, கீழ்க்கண்ட 15 பைசா தபால் தலை வெளியிடப்பட்டது. இத்தாலியில் உள்ள ஓர்டோனா கதீட்ரலில் உள்ள தோமாவின் படம் இது.

கீழே கொடுக்கப்பட்டுள்ள 20 பைசா மதிப்புள்ள இரண்டாவது தபால் தலை 3.7.1973 அன்று, தோமாவுடைய இறப்பின் 19-ஆவது நூற்றாண்டை (கி.பி. 72-1972) நினைவு கூரும்படி வெளியிடப்பட்டது. இந்திய அரசு பரிசுத்த தோமாவின் நினைவாக இவ்விரண்டு தபால் தலைகளையும் வெளியிட்டு கௌரவித்தது.







புனித தோமா கிறித்தவர்கள் இடையே கிறித்தவ நம்பிக்கையை ஏற்படுத்தி, அதிகரிக்க வைத்ததற்காக அவருக்கும், நமது ஆண்டவருக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்!

கிறிஸ்தவ
வரலாற்றுச் சுவடுகள்

மாத ஆய்விதழ் சந்தா விபரம்

| சந்தா விபரம் | உள்நாடு |
|---|---|
| தனிப்பிரதி | ₹ 60 + நன்கொடை |
| ஆண்டு சந்தா | ₹ 600 + நன்கொடை |
| ஐந்து ஆண்டு சந்தா | ₹ 3000 + நன்கொடை |

வங்கி விபரம்

Name: Christian Historical Society
A/c Number : 1748 020000 4906
Bank name : Federal Bank
IFSC code: FDRL0001748

"கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்"
மாத ஆய்விதழை நீங்கள் தொடர்ந்து பெற்றுக் கொள்ள
G-Pay மூலம் நன்கொடை செலுத்த 91767 80001 என்ற எண்ணுக்கு செலுத்தவும்
காசோலை மற்றும் வரைவோலை செலுத்த
'கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்'
( Christian Historical Society )
என்ற பெயரில் எடுக்கவும்

ஆசிரியர்

கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்,
கதவு எண் 2-2-3(4), வடக்குத்தெரு,
பங்களாச் சுரண்டை-627859,
தென்காசி மாவட்டம் (தமிழ்நாடு)
04633 290401, 91767 80001

christianhistoricalsociety.in
tchsportal.co.in
christianhistorical@gmail.com

A PRACTICAL COURSE IN

SOUTH INDIAN MUSIC


FOR BEGINNERS.

தென்னிந்திய சங்கீதத்திற்கு சாகித்தியம் பெரும்பாலும் தெலுங்கில் அமைக்கப்பட்டிருந்ததலால், தமிழ் பயிலும் மக்களின் ஆரம்பப் பயிற்சிக்கு அது தடையாயிருக்கிறது. ஆதலால் சங்கீதப் பயிற்சி செய்யத் தொடங்கும் தமிழ்மக்களுக்குத் தங்கள் தாய்மொழியில் சாகித்தியம் இருந்தால், எளிதில் சங்கீதம் கற்க உதவியாகும் என்ற எண்ணத்தை மேற்கொண்ட எங்கள் தந்தையார் ஆபிரகாம் பண்டிதர், பெரும்பாலும் தமிழில் சாகித்தியம் இல்லாத கீதங்களுக்கும், சுரஜதிகளுக்கும் வர்ணங்களுக்கும், எத்துக்கடை சுரங்களுக்கும், கீர்த்தனைகளுக்கும் தமிழில் இலகுவான நடையில் பக்தி ரசம் சொட்டத்தக்க இனிமையான சாகித்தியங்கள் செய்திருக்கிறார்கள்.

இவ்வுண்மைகளை நன்குணர்ந்த அனேக சங்கீத அபிமானிகளின் வேண்டுகோளுக்கிணங்கி, தமிழறியும் சிறுவர்கள் அடைந்து வரும் சங்கீதப் பயிற்சியின் ஆரம்பத்தில் உண்டாகக்கூடிய சொற்பிழை, சுரப்பிழை, தாளப்பிழைகள் நீங்கி சுத்தபாடம் ஆகும் பொருட்டு, எமது தந்தையார் எங்களுக்குக் கற்பித்த வரிசை ஒழுங்கின்படி, அவர்கள் விருப்பத்திற்கிணங்க, எல்லோரும் எளிதில் சங்கீதம் பயிலும் வண்ணம் வெளியிட்டிருக்கிறோம்.

- ஆ.சுந்தரபாண்டியன் 28-07-1934







# காலந்தோறும் ‘கருணாமிர்த சாகரத்திரட்டு’


ந. சூரிய மூர்த்தி,
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்மொழித் துறை,
சென்னைப் பல்கலைக்கழகம் - 05


‘கருணாமிர்த சாகரத்திரட்டு’ என்னும் இசைப்பயிற்சி நூல் வெளிவந்து 117 ஆண்டுகள் ஆகின்றன. 1907-இல் முதன்முதலில் ஆபிரகாம் பண்டிதர் பதிப்பித்த மூல முதற்பிரதியை விடுத்து இன்றுவரையிலும் மூன்று பதிப்புகளைக் கண்டுள்ளது.

1. 1934-இல் ‘A PRACTICAL COURSE IN SOUTH INDIAN MUSIC FOR BEGINNERS. BOOK I-XIV; தென் இந்திய சங்கீத ஆரம்ப அப்பியாசமுறை புத்தகம் I – XIV’ (கருணாமிர்த சாகரத்திரட்டு) என்னும் பெயரில் ஆபிரகாம் பண்டிதரின் மகனான ஆ. சுந்தரபாண்டியன் மறுபதிப்பு செய்து வெளியிட்டார்.
2. 2009-இல் ஆபிரகாம் பண்டிதரின் 150 ஆம் பிறந்தநாள் நினைவாக, வளவன் பதிப்பகம் **‘மு. ஆபிரகாம் பண்டிதர் தமிழிசைக் களஞ்சியம்’** என்னும் பெயரில் 7 தொகுதிகளாக அவருடைய கருணாமிர்த சாகரத்திரட்டு, கருணாமிர்த சாகரம் - முதல் பாகம், இரண்டாம் பாகம் ஆகியவற்றைத் தொகுத்து வெளியிட்டது. அதன் முதற்தொகுதியாக கருணாமிர்த சாகரத்திரட்டு மீள்பதிப்பாக அமைந்தது.
3. 2022-இல் ஏ. ஆர். ரஹ்மான் ஃபவுண்டேஷன் & எழுத்து பிரசுரம் இணைந்து ‘தமிழிசையை எளிதாகக் கற்றுக் கொள்ளுங்கள்’ என்னும் பெயரில் கருணாமிர்த சாகரத்திரட்டு நவீனப்பதிப்பாக வெளியானது.

இப்படி 1907-இல் முதற்பதிப்பும் 1934-இல் மறுபதிப்பும் 2009-இல் மீள்பதிப்பும் 2022-இல் நவீனப்பதிப்பும் என நான்கு பதிப்பு வடிவங்கள் நமக்கு இன்று காணக்கிடைக்கின்றன. இவற்றுள் பண்டிதரே பதிப்பித்த முதற்பதிப்பை ஆதாரமாகக் கொண்டு மற்ற பதிப்புகளை ஆய்வு செய்கையில், மூலவடிவத்திற்கும் பின்னவற்றிற்கும் பெரிதும் வேறுபாடுகள் உள்ளன.

## 1907-இலேயே தேங்கிவிட்ட எழுத்து


முதன்முதலில் பண்டிதரால் வெளியிடப்பட்ட பதிப்பில் அதற்கென அவரால் எழுதப்பட்டிருந்த நூல் காணிக்கை மற்றும் முகவுரை (நூல் காணிக்கை என்றோ, முகவுரை என்றோ பண்டிதரால் நூலுள் குறிக்கப்படவில்லை. பொருண்மை மற்றும் அமைப்பு கருதி அவை இங்கே இப்பெயர்களால் கையாளப்படுகின்றன.) ஆகியன அப்பதிப்பிலேயே தேங்கி நின்றுவிட்டன. அடுத்து வெளியான மூன்று பதிப்புகளிலும் அவை இடம்பெறவில்லை. அப்பகுதிகள் இங்கே அச்சாகின்றன.

“இந்நூலை, சங்கீதக்காரனாகிய தாவீதரசனை கிருபையினாலும் இரக்கத்தினாலும் முடிசூட்டியவரும் ஓசன்னாபாடிய பாலர்களின் துதியால் ஆனந்த மடைந்தவருமாகிய என் ஆண்டவரின் திருப்பாத கமலங்களில், காணிக்கையாக வைக்கின்றேன்.

**மு. ஆபிரகாம் பண்டிதர்.”**

என்று தமது நூலைக் கர்த்தருக்குக் காணிக்கையாக்கியிருக்கின்றார். அடுத்து அமைந்திருக்கும் முகவுரைப் பகுதியாவது,

‘கருணாநிதி வைத்தியசாலை இல்லத்துத் தமிழறியுஞ் சிறுவர் அடைந்து வருஞ் சங்கீதப் பயிற்சியின் தொடக்கத்தில் அவர்களுக்குண்டாகக் கூடிய சொற்பிழை, சுரப்பிழை, தாளப்பிழைகள் நீங்கிச் சுத்த பாடமாகும் பொருட்டும் பாடமாகும் உருப்படிகளை அப்போதைக் கப்போது அச்சிட்டு (96)



இந் நூலை,

சங்கீதக்காரனுகிய தாவீதாசனே கிருபையினலும் இரக்கத்தினலும் முடி சூட்டியவரும் ஒசன்னபாடிய பாலர்களின் ... ஆனந்த மடைந்தவருமாகிய என் ஆண்டவரின் திருப்பாத கமலங்களில், காணிக்கையாக வைக்கின்றேன்.

உருப்படிகளை முதற்பாகமாக வெளியிட்டிருக்கிறேன். இதில் முதலிலுள்ள (41) உருப்படிகள் தஞ்சாவூர் சங்கீத வித்வான் ம-௱-௱-ஸ்ரீ ஜெகன்னாத பட்டுகோசாமி அவர்களால் சொல்லிக் கொடுக்கப்பட்டும் பிழைபார்க்கப்பட்டு முள்ளன. பின்னுள்ள 55-ம் தஞ்சாவூர் அரமனை சங்கீத வித்வான் வைணீகர் ம-௱-௱-ஸ்ரீ ஆதிமூர்த்தி ஐயரவர்கள் குமாரர் அரமனை வைணீகர் ம-௱-௱-ஸ்ரீ வெங்கடாசல ஐயரவர்களால் வீணையிற் சொல்லிக் கொடுக்கப்பட்டும் சுரப்படுத்திப் பிழை பார்க்கப் பட்டுமுள்ளன. மொத்தத்திலுள்ள சுமார் 50 உருப்படிகள் தஞ்சாவூர் சங்கீத வித்வான் ம-௱-௱-ஸ்ரீ தியாகராஜ பிள்ளையவர்கள் குமாரர் ம-௱-௱-ஸ்ரீ சாமியா பிள்ளையவர்களால் வாய்ப்பாட்டாகச் சொல்லிக் கொடுக்கப்பட்டுள்ளன. சாகித்தியமில்லாத சுரஜதிகளுக்கும் வர்ணங்களின் எத்துக்கடை சுரங்களுக்கும் பிறபாஷைகளிலுள்ள சாகித்தியங்களுக்கும் தமிழில் எளிதான நடையில் சாகித்தியஞ் செய்திருக்கின்றேன். அறிவிற்சிறந்த பெரியோர்களை இதிற்காணும் பிழைகளைப் பொறுக்கப் பிரார்த்திக்கிறேன்.

'கர்த்தரைத் துதியுங்கள்; அவர் நல்லவர்; அவர் கிருபை யென்று முள்ளது.'

'கர்த்தருக்குப் புதுப்பாட்டைப் பாடுங்கள்; பூமியின் குடிகளே! யெல்லாரும் கர்த்தரைக் கெம்பீரமாய்ப் பாடுங்கள்.'

'சமுத்திரமும் அதனிறைவும் பூச்சக்கரமும் அதன் குடிகளும் முழுங்குவதாக. கர்த்தருக்கு முன்பாக ஆறுகள் கைகொட்டிப் பர்வதங்கள் ஏகமாய்க் கெம்பீரித்துப் பாடக்கடவது.'

'என் ஆத்துமாவே கர்த்தரைத் தோத்தரி. அவர் செய்த சகல வுபகாரங்களையு மறவாதே.'

**மு. ஆபிரகாம் பண்டிதர்.**"

இவ்விரு பகுதிகளும் வேறு எந்தப் பதிப்புகளிலும் இடம்பெறவில்லை. ஆயினும் பண்டிதரின் முகவுரையில் உள்ள தகவல்கள் ஆங்காங்கே குறிப்பிடப்பட்டுள்ளன. முனைவர் சண்முக. செல்வகணபதி, முனைவர் செ. கற்பகம் ஆகியோர் மீள்பதிப்பிற்கு அளித்த 'ஆய்வு முன்னுரை'யிலும், தமிழ் இசையியல் அறிஞர் அமுதா பாண்டியன் அவர்கள் நவீனப் பதிப்பிற்கு அளித்த 'நவீனப் பதிப்பிற்கான முன்னுரை'யிலும் இம்முகவுரையின் சாரத்தை எழுதியிருக்கின்றனர். நூல் காணிக்கையும் முகவுரையில் அமைந்த கர்த்தரைப்பற்றிய புகழ்மொழிகளும் இதுவரையிலும் இடம்பெறாமலிருந்தது கண்டறிந்து இப்போது இங்கு வெளியிடப்பட்டிருக்கின்றன.


**பண்டிதரின் பதிப்பும் பின்னவைகளும்**

கருணாமிர்த சாகரத்திரட்டின் முதற்பதிப்பில் 96 உருப்படிகளைப் பண்டிதர் அளித்திருந்தார். ஆனால் அவரது மகனால் கொண்டுவரப்பட்ட மறுபதிப்பானது பண்டிதரின் முதற்பதிப்பை அடியொற்றி அமையாமல் அமைப்புமுறையே மாறுபட்டுள்ளது. 96 உருப்படிகளையும் ஒரே புத்தகமாகப் பண்டிதர் கொடுக்க, மறுபதிப்பானது (உருப்படிகளைப் பரித்து) பதினான்கு சிறுசிறு புத்தகங்களைத் தொகுத்துப் பதிப்பிக்கப்பட்டதாக உள்ளது.

பண்டிதர் முதற்பதிப்பின் முகவுரையில் 'அப்போதைக்கப்போது அச்சிட்டு' என்று குறிப்பிட்டிருப்பதைக் காண்கையில், பண்டிதரின் மகனார் மறுபதிப்பு செய்யத் தொடங்கியபோது முதற்பதிப்பு கைக்குக் கிட்டாமல் இச்சிறுசிறு அளவிலான பதினான்கு புத்தகங்களே கிடைத்திருக்குமோ, என்கிற ஐயத்திற்கு இடமளிப்பதாகவே இம்மறுபதிப்பானது அமைந்துள்ளது. மேலும் அதற்கு வலுசேர்க்கும் விதமாக, மறுபதிப்பின் (முதற்புத்தகத்தில் அமைந்த குருவணக்கம் தவிர்ந்த) உருப்படிகள் அனைத்தும் பாட்டு, கீர்த்தனை என்னும் பொதுவான தலைப்புகளில் அமைந்திருக்க, பண்டிதரின் முதற்பதிப்பிலோ ஒவ்வொரு உருப்படிகளும் பொருண்மைக்கேற்ற தனித்தனித் தலைப்பிட்டு அமைக்கப்பட்டிருக்கின்றன. உதாரணமாக, மறுபதிப்பில் பதினான்காம் புத்தகத்தின் 7 ஆவது உருப்படி கீர்த்தனை என்று அமைந்திருக்க, பண்டிதரின் பதிப்பில் அது 'வானலோகநாதன் மனிதனாக பிறந்திருக்கிறார் பார்க்கவாருங்கள் என்று அழைத்தல்' என்ற தலைப்பில் அமைந்திருக்கின்றது.

இம்மறுபதிப்பைப் பின்பற்றியே மீள்பதிப்பு, நவீனப்பதிப்பு ஆகியன அமைந்திருத்தலால் இவற்றிலும் அதேமுறை பின்பற்றப்பட்டுள்ளது.

மூல முதற்பிரதியின்படி பதிப்பு அமையாமல் சிறுசிறு புத்தகங்களாகக் கிடைத்து அமைந்த பதிப்பினால் தமிழிசை



கடவுள் துணை.

கருணாமிர்த சாகரத்திரட்டு

முதற்பாகம்.

OFFICE OF THE REGISTRAR ... 1907 MADRAS.

உலகிற்கு நிறையுண்டாகியிருப்பதையும் மறுப்பதற்கில்லை. பண்டிதர் 96 உருப்படிகளை மட்டுமே வெளியிட்டிருந்த போதிலும் அவருடைய கீதங்கள், வர்ணங்கள், கீர்த்தனைகள் சில அதில் இடம்பெறவில்லை. மாறாக மறுபதிப்பில் இடம்பெற்றன.

அவ்வகையில் முதற்புத்தகத்தில் அமைந்த 7 கீதங்கள், மூன்றாம் புத்தகத்தில் அமைந்த 3, 7 (தமிழில் சாகித்தியம் செய்யப்படாத சுரஜதி) ஆம் உருப்படிகள்; நான்காம் புத்தகத்தில் அமைந்த 1, 6 (தமிழில் சாகித்தியம் செய்யப்படாத வர்ணம்) ஆம் உருப்படிகள்; ஐந்தாம் புத்தகத்தில் அமைந்த 5,6 ஆம் உருப்படிகள்; ஆறாம் புத்தகத்தில் இடம்பெற்ற 1,2,4,5 ஆகிய உருப்படிகள்; ஒன்பதாம் புத்தகத்தில் அமைந்த 2,3,4,5,6,7 ஆகிய உருப்படிகள்; பதின்மூன்றாம் புத்தகத்தில் அமைந்த 5,6,7 ஆகிய உருப்படிகள்; பதினான்காம் புத்தகத்தில் அமைந்த 1,2 ஆகிய உருப்படிகள் முதற்பதிப்பில் அமையாமல் மறுபதிப்பில் அச்சில் வந்தன.

மறுபதிப்பையே பின்பற்றிய மீள்பதிப்பும் நவீனப்பதிப்பும் இதே அமைப்பைக் கொண்டவையே. ஆனால் பின்னைய இரண்டு பதிப்புகளிலும் மறுபதிப்பிலிருக்கும் இரு உருப்படிகள் விடுபட்டுள்ளன. மறுபதிப்பின் பதினான்காவது புத்தகத்தில் 9 உருப்படிகள் இருக்க, மீள்பதிப்பிலும் நவீனப்பதிப்பிலும் 7 (கடைசி இரண்டு இல்லை) உருப்படிகளே இருக்கின்றன. இதுமட்டுமன்றி மூன்று பதிப்பிலும் ஒரு குறிப்பிடத்தக்க ஒற்றுமையும் காணப்படுகின்றது. அது யாதோவெனின் ஐந்தாம் புத்தகத்தில் 4ஆவதாக அமைந்த 'உன்னத பரனுனதருள்' என்னும் உருப்படி எட்டாம் புத்தகத்தின் 2ஆவதாகவும் அமைந்துள்ளது. ஒரே பாடல் மறுபதிப்பில் இருமுறை அச்சாகியிருக்கின்றது. பின்னர் வந்த பதிப்புகளிலும் அதேபோல் அச்சாகியுள்ளது.

எனினும் எச்சிறு செய்தியும் விடுபடாமல் மிக நேர்த்தியாகப் பதிப்பித்து வெளியிடும் திறம் கொண்ட பண்டிதர் ஏன் இப்படிச் சிலவற்றைப் பதிப்பிக்காது விட்டார் என்பது பற்றி ஆராய்கையில், அவரது முதற்பதிப்பே அதற்கு விடை பகர்கின்றது. இந்நூலைப் பதிப்பிக்கும்போதே மிகத்தெளிவாகக் 'கருணாமிர்த சாகரத்திரட்டு முதற்பாகம்' என்றே பதிப்பித்து வெளியிட்டிருக்கின்றார். இதை நோக்குகையில் அவருக்கு இதன் தொடர்ச்சியாக அடுத்த பாகத்தை வெளியிடும் ஆவல் இருந்துள்ளதும் புலனாகின்றது. அடுத்த பாகத்தை வெளியிட்டிருப்பின் விடுபட்டவை அதில் இடம்பெற்றிருக்கக் கூடும் என்றே தோன்றுகின்றது.

புத்தகத்தின் உள்ளே பாடல்களுக்கு வரிசை எண் தருகையில் அச்சுப்பிழை நேர்ந்துள்ளது. கீர்த்தனங்களின் முதற்குறிப்புப் பகுதியிலும் இவ்வச்சுப்பிழை நேர்ந்துள்ளது. 78-வது பாடல் 80 என்றும் 84, 90 ஆகிய எண்கள் அடுத்தடுத்த பாடல்களுக்கு இருமுறையும் அச்சாகியிருக்கின்றன. (85, 91 ஆகிய உருப்படிகள் 84, 90 என்றே அச்சாகியுள்ளன). இப்புத்தகத்தின் முகவுரையில் 96 உருப்படிகள் என்று பண்டிதர் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தபடி பாடல் எண்ணிக்கை சரியாக இருக்கின்றன. எண்களை அச்சிடுகையில் ஏற்பட்ட பிழையேயன்றி வேறில்லை.

முதற்பதிப்பின்றிச் சிறுசிறு புத்தகங்களின் தொகுப்பாக அமைந்த மறுபதிப்பின்வழி புதிய உருப்படிகள் கிடைக்கப்பெற்றிருப்பினும் முதற்பதிப்பின் 96 உருப்படிகளும் மறுபதிப்பில் இடம்பெற்றனவா எனில் இல்லை. 92 உருப்படிகளே இடம்பெற்றிருக்கின்றன. 4 உருப்படிகள் இடம்பெறவில்லை. இப்பதிப்புகளை ஒப்பிட்டுச் செய்த ஆய்வின் மூலம் அந்நான்கு உருப்படிகளும் அடுத்த பதிப்பைக் காணாமல் இருக்கின்றன. அவை அடுத்தடுத்த இதழ்களில் வெளியாகும். பண்டிதரின் இசைப்பணி மேலும் ஒருபடி முன்னேறி விரிவடையவிருக்கின்றது. தமிழிசை உலகத்திற்கு பண்டிதரின் பாடல்கள் கிடைக்கவிருக்கின்றன.


கிறிஸ்தவ
# வரலாற்றுச் சுவடுகள்

கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம் நடத்தும் கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள் மாத ஆய்விதழை நண்பர்கள், உறவினர்களுக்கு அறிமுகப்படுத்த அன்போடு கூட கேட்டுக் கொள்ளுகின்றேன். கடந்த நான்கு வருடங்களாக ஒவ்வொரு மாதமும் தொடர்ந்து வெளி வந்து கொண்டு இருக்கின்றது. மறைக்கப்பட்ட, மறைந்த, மறந்த வரலாற்றுப் பக்கங்களை அடுத்த தலைமுறையினரின் கரங்களில் கொடுப்பது நம் கடமை.

சங்கத்தின் 'கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்' மாத ஆய்விதழை நீங்கள் தொடர்ந்து பெற்றுக் கொள்ள விரும்பினால் அதற்கான ஆண்டு சந்தா 600 ரூபாய் ஐந்து ஆண்டுக்கான சந்தா 3000 ரூபாய் மட்டுமே. மற்றும் G-Pay மூலம் நன்கொடை செலுத்த விரும்பினால் 91767 80001 என்ற எண்ணுக்கு செலுத்தவும். காசோலை மற்றும் வரைவோலை செலுத்த 'கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்' (Christian Historical Society) என்ற பெயரில் எடுத்து அனுப்பவும்.

நன்கொடை சந்தா செலுத்திய தகவலை கொடுக்கப்பட்டுள்ள தொலைபேசி எண் அல்லது வாட்ஸ் ஆப் அல்லது மின்னஞ்சல் முகவரிக்கு மறக்காமல் தெரியப்படுத்தவும்.

**வங்கி விபரம்**

**Name: Christian Historical Society**

**A/c Number : 1748 020000 4906**

**Bank name : Federal Bank**

**IFSC code: FDRL0001748**

**ஆசிரியர்**

**கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்,**
**கதவு எண் 2-2-3(4), வடக்குத்தெரு,**
**பங்களாச் சுரண்டை-627859,**
**தென்காசி மாவட்டம் (தமிழ்நாடு)**
**04633 290401, 91767 80001**

# நெப்போலிய போர்களை நினைவுபடுத்தும்

# சேலம் ஸ்தூபி வடிவ நினைவுச் சின்னம்



பர்னபாஸ்.ஜே
சேலம் வரலாற்றுச் சங்கம்

***ஸ்தூபி வடிவ நினைவுச் சின்னம் :***

சேலம் பழைய ஆங்கிலேயர் கல்லறைத் தோட்டத்தில் உயர்ந்த ஸ்தூபி வடிவிலான (Obelisk design) ஒரு கல்லறை அனைவரின் கவனத்தையும் கவர்கிறது. சேலம் வரலாற்றிலும், சர்வதேச வரலாற்றிலும், தொடர்புள்ள ஒரு வரலாற்றுச் சின்னம் இது. இந்த கல்லறை ஸ்தூபிக்கு அடியில் மரித்தவரின் உடல் இல்லை என்று சொல்லப்படுகிறது. இது வெறும் நினைவுச் சின்னம் மட்டுமே என்று வரலாற்று ஆய்வாளரும், சேலம் மாவட்டத்தின் கலெக்டராக இருந்தவருமான திரு. ஹென்றி லீ பானு சொல்கிறார். ('This is probably a cenotaph.' - p. no. 167, Salem Cemetery - A Manual of the Salem District in the Presidency of Madras - H. Le Fanu, Vol. 1- The District, Madras, 1883) கால ஓட்டத்தில் சேதமடைந்து இருந்த இந்த ஸ்தூபி நினைவுச் சின்னத்தை கடந்த 2009 ஆம் ஆண்டு சேலம் வரலாற்றுச் சங்கம் பழுதுபார்த்து நிலை நிறுத்தியது.

அந்த திருப்பணிகளின் திட்ட அறிக்கையில் இந்த கல்லறை ஸ்தூபியின் தகவல்களைப் பார்த்து கூடுதல் தகவல்களை சேகரிக்க முனைந்த பாக்சா நிர்வாகி திருமதி. டென்னிஸ் லவ் அம்மையார் பிரிட்டீஷ் நூலகத்தின் Old India Office ஆவணங்களைத் தேடியபோது, மிகவும் ஆச்சரியமான தகவல்களைப் பெற்றதாக எனக்கு கடிதம் மூலம் அவைகளைத் தெரிவித்தார். அதைப் படித்த நானும் மிகுந்த ஆர்வமும், ஆச்சரியமும் அடைந்தேன். அது என்னவென்றால் தளபதி பெர்ஷன் ஐரோப்பாவில் நெப்போலியனுக்கு எதிராக நடந்த தீபகற்ப போரில் (Peninsular War) தளகர்த்தன் வெலிங்டன் தலைமையின் கீழ் போரிட்டவர் என்பதும், அந்தப் போரில் தோல்வியடைந்து கைதான மாவீரன் நெப்போலியனை ஒரு பெரும் கடற்படையுடன் அழைத்துச் சென்று அட்லாண்டிக் பெருங்கடலில் உள்ள பாறைத் தீவான செயின்ட் ஹெலினா தீவில் சிறைவைத்து காவல் புரிந்தவர்தான் இந்த தளபதி பெர்ஷன் என்பதும், அந்த தகவலில் கிடைத்தது (Very interesting things about Lt. Col. Fehrszen, Who came from the Cape Colony in South Africa, fought in the Peninsular War under Wellington, and commanded the second battalion of the 53rd Regiment which accompanied Napoleon to St. Helena and guarded him there. )

***இந்தியாவில் தளபதி பெர்ஷன் :***

1817ஆம் ஆண்டு செயின்ட் ஹெலினா தீவிலிருந்து இங்கிலாந்திற்கு அழைக்கப்பட்ட தளபதி, பின்னர் அங்கிருந்து இந்தியாவிலுள்ள தனது படைப்பிரிவின் முதலாம் பட்டாளத்தோடு சேர்ந்துகொள்ள உத்தரவிடப்பட்டார். அதன்படி இங்கிலாந்திலிருந்து மினர்வா என்ற கப்பலில் பயணப்பட்டு 1819 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 9ஆம் நாள் மெட்ராஸ் துறைமுகம் வந்துசேர்ந்தார். அங்கிருந்து திருச்சிராப்பள்ளி சென்ற தளபதி அங்கு நிலைகொண்டிருந்த தனது 53 ஆவது படைப்பிரிவின் முதலாம் பட்டாளத்தை வழிநடத்தும் தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். அப்பொழுது தென்பிராந்திய இராணுவத் தலைமையிடமான திருச்சிராப்பள்ளியிலிருந்து ஒரு பெரும்படை நகர்வு (Grand Army Move) பெல்லாரியை நோக்கிப் புறப்பட்டது.

அந்த பெரும்படை நகர்வில் தனது படைப்பிரிவை வழிநடத்திக் கொண்டு அந்த இராணுவ நகர்வில் பங்கேற்றுப் பயணப்பட்டார் தளபதி பெர்ஷன். இந்த பெரும்படை நகர்வு வழியில் நாமக்கல்லில் முகாமிட்டு இருந்தபோது படைகளுக்குள் காலரா உயிர்கொல்லி நோய் பரவத் தொடங்கியது. கொள்ளை நோயின் முதல் பாதிப்பாக தளபதி பெர்ஷன் பாதிப்படைந்தார். நோய் தாக்கிய 12 மணி நேரத்திற்குள்ளாகவே தளபதி மரித்துப் போனார். அவரது உடல் அங்கே முகாமிற்கு அருகிலேயே அடக்கம் செய்யப்பட்டது. காலரா நோய்பரவல் பீதி காரணமாக பெரும்படை முகாமைக் கலைத்துவிட்டு வடக்கு நோக்கிய நகர்வை உடனடியாகவும் விரைவாகவும் துவக்கியது. தளபதியின் மறைவிற்குப் பின்பு கிழக்கிந்திய கம்பெனி இராணுவத்தின் சேனா பேசிட் அமைப்பு நாமக்கல்லில் அவரது அடக்கஸ்தலம் குறிக்கப்படாததால், சேலம் கல்லறைத் தோட்டத்தில் அவரின் நினைவாக ஒரு ஸ்தூபி நினைவுச் சின்னத்தை அமைத்தது. (An Obelisk Cenotaph)

### கோடை பேய்மழை புயல் காற்று வீசியபோது:

19-5-2018 அன்று இரவு பெய்த பேய்மழை பெரும் காற்றில் பிரட்ஸ் சாலையோரம் நின்றிருந்த 200 ஆண்டுகளுக்கும் மேலான பழம்பெரும் இராட்சத புளியமரம் வேரோடு பெயர்ந்து இந்த ஸ்தூபி நினைவுச் சின்னத்தின் மீது பலமாக விழுந்தது. இதன் தாக்கத்தால் கல்லறை ஸ்தூபி பாதியாக உடைந்துபோனது. பாரிய புளிய மரம் பெயர்ந்து விழுந்த தாக்கத்தில் பல வரலாற்றுச் சிறப்பு மிக்க கல்லறைகள் சேதமடைந்தன.

சேலம் வரலாற்றுச் சங்கத்தாரின் வேண்டுகோளை ஏற்று சேலம் CSI கிறிஸ்துநாதர் ஆலய நிர்வாகத்தினர் நாங்கள் கொடுத்த கல்லறைகளின் பழைய ஒளிப்படங்களின் உதவியோடு ஸ்தூபி நினைவுச் சின்னத்தையும், மற்ற வரலாற்றுக் கல்லறைகளையும் மீண்டும் பழையபடி கட்டி எழுப்பினார்கள்.

### 200 ஆண்டுகள் நிறைவில் ஸ்தூபி நினைவுச் சின்னம் :

பிரிட்டிஷ் தளபதி பெர்ஷனின் 200ஆவது ஆண்டு நிறைவு நினைவுநாள் சேலம் வரலாற்றுச் சங்கம், மற்றும் சேலம் CSI கிறிஸ்துநாதர் ஆலயம் இணைந்து அனுசரிக்கப்பட்டது. நிகழ்வில் ஆலய நிர்வாகத்தினரும், உறுப்பினர்களும், சேலம் வரலாற்றுச் சங்க நிர்வாகிகளும், உறுப்பினர்களும், நண்பர்களும் பங்கேற்றனர். இந்த நிகழ்வில் தளபதி பெர்ஷன் பற்றிய சுவாரஷ்யமான விஷயங்களை கூடியிருந்தோர் மத்தியில் நான் எடுத்துரைத்தேன்.

### வெள்ளத்தில் அடித்துச் செல்லப்படும் ஓடம் போல:

பிரிட்டிஷ் இராணுவத்தில் லெப்டினென்ட் கர்னல் என்ற பதவிக்கு உயர்ந்த தளபதி ஓலெப் காட்லீப் பெர்ஷன் (Lt. Col. Olof Godlief Fehrszen -1786-1820) பிரிட்டிஷ் காலாட் படையின் 53ஆவது படைப்பிரிவின் முதலாவது பட்டாளத்தை வழிநடத்தும் கட்டளை அதிகாரியாக அப்பொழுது அவர் இருந்தார். தனது இராணுவப் பணியில் சிறப்பான ஆர்வமும், வீரமும் பாராட்டியதால் தலைமைத் தளபதிகளிடம் நன்மதிப்பைப் பெற்றவர். படைவீரர், இளநிலை அதிகாரி, கேப்டன், மேஜர், மற்றும் லெப்டினென்ட் கர்னல் என்று குறுகிய காலத்தில் படிப்படியாக உயர்ந்த போர் வீரனின் வளர்ச்சியை மரணம்





தடுத்து தனக்குள் அடக்கிக் கொண்டது.

தளபதி பெர்ஷனின் முன்னோர்கள் அப்பொழுது டச்சுக் கிழக்கிந்திய கம்பெனி கட்டுப்பாட்டில் இருந்த தென் ஆப்பிரிக்க நன்னம்பிக்கை முனை (Cape of Good Hope - Cape Colony) குடியேற்றப் பகுதியில் குடியேறிவாழ்ந்து வந்தார்கள்; அவர்கள் ஐரோப்பாவின் வட பிராந்தியமான ஸ்கேன்டிநேவியன் பகுதியைச் சேர்ந்தவர்கள். பெர்ஷனின் இளமைப் பருவக் காலங்களில் இந்த நன்னம்பிக்கை முனை குடியேற்றப் பகுதி பிரிட்டீஷார் வசம் வந்தது. இளைஞனாக இருந்த பெர்ஷன் பிரிட்டிஷ் இராணுவத்தில் இணைந்து பல்வேறு போர் முனைகளில் பங்கேற்று, வீரதீர செயல்கள் புரிந்து உயர்தார். ஐரோப்பாவில் நெப்போலியனுக்கு

எதிராக நேசநாடுகளின் படைகள் மேற்கொண்ட தீபகற்ப போரிலும், ஸ்பெயின், போர்ச்சுக்கல், பகுதிகளில் நடந்த போர்களிலும் தலைமைத் தளகர்த்தன் வெலிங்டன் தலைமையின் கீழ் படைநடத்தி பெரும் வெற்றிகளை கண்டவர் தளபதி பெர்ஷன்.

### *நெப்போலியனோடு நேருக்கு நேர் :*

போரில் படுதோல்வியடைந்து, முடிதுறந்து, கைதியாய் சரணடைந்த மாவீரன் சக்ரவர்த்தி நெப்போலியனை பிடித்துக் கொண்டு போய் அட்லாண்டிக் பெருங்கடலில் உள்ள பெரும் பாறைத் தீவான செயின்ட் ஹெலினா தீவில் சிறை வைத்து அங்கே அந்த தீவாந்திர ஜென்ம தண்டனையயில் நெப்போலியனை காவல் செய்யும் பொறுப்பு தளபதி பெர்ஷனுக்கும் அவரது படைப்பிரிவிற்கும் கொடுக்கப்பட்டது. இரண்டு ஆண்டுகள் 1815-17 வரை இந்த காவல் பணியில் நெப்போலியனோடு நன்கு பழகும் வாய்ப்பைப் பெற்றார் அவர். தளபதி பெர்ஷன் பலமுறை சக்ரவர்த்தி நெப்போலியனோடு காலை உணவு வேளையிலும், மதிய உணவு வேளையிலும், உரையாடும் வாய்ப்பைப் பெற்றிருந்தார். ஓவியக்கலையில் ஈடுபாடு கொண்டிருந்த தளபதி நெப்போலியனை வைத்து பலமுறை ஓவியம் வரைந்திருக்கிறார். நெப்போலியனோடு தனக்கு ஏற்பட்டிருக்கும் இந்த நெருக்கமான நட்பு, அவருடனான உரையாடல்கள், பற்றி தனது சகோதரனுக்கு தளபதி பெர்ஷன் எழுதிய கடிதங்களில் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியா வந்து சேர்ந்த தளபதி பெர்ஷன் இந்தியாவில் நிலவும் தட்பவெப்ப நிலைகளுக்கும், சுகாதார நிலவரங்களுக்கும், தனது உடல் நிலை ஈடுகொடுக்காது என்று நம்பியிருந்தது உண்மையாகவே ஆனது. மேலும் இந்தியர்களின் பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள் வேடிக்கையானது, அங்கே பணிசெய்வது கடினமானது எனவும் தளபதி அடிக்கடி சொல்லுவார். தான் பயந்ததே அவருக்கு அதிகமாக நேர்ந்துவிட்டது. நாமக்கல்லில் முகாமிட்டிருந்த இராணுவத்திற்குள் காலரா கொள்ளை நோய் பரவி இராணுவத்தினரை பாதித்தபோது அதன் முதல் பலியாக தளபதி பெர்ஷன் மரணமடைந்தது துர்அதிர்ஷ்டம்.

### *நிலவும் மாறுபட்ட கருத்துக்கள்:*

நாமக்கல் கோட்டைப் பகுதியில் மரணமடைந்த தளபதி பெர்ஷனின் உடல் சேலம் கொண்டுவரப்பட்டு, அங்கே சேலம் கல்லறைத் தோட்டத்தில் சகல இராணுவ மரியாதைகளுடன் நல்லடக்கம் செய்யப்பட்டது என்ற தகவலும், இதனை உறுதி செய்யும் 'Underneath Repose The Remains of' என துவங்கும் கல்லறை இறுதி சாசன வாசகமும் இங்கே குறிப்பிடத்தக்கது. ஆனால் வரலாற்று ஆய்வாளரும், சேலம் மாவட்ட கலெக்டராக இருந்தவருமான திரு. ஹென்றி லீ பானு தனது Salem Manual லில் இந்த கல்லறையைப் பற்றிக் குறிப்பிடும்போது 'இது வெறும் நினைவுச் சின்னம் மட்டுமே' என்று குறிப்பிட்டுள்ளது இங்கே நோக்கத்தக்கது. எங்கோ பிறந்து, எங்கெங்கெல்லாமோ சிறந்து, நாடுகள் கடந்து, வருத்தத்தின் பூமியான இங்கே வந்து மாண்டுபோன வீரர்கள், திருத்தொண்டர்கள், இவர்களின் நினைவிடங்கள் வரலாற்றின் சாட்சியாக நிலைக்கட்டும்.



Dr.C.T.Kiruba & Dr. Mrs. Aruna Jonathan



Dr.Jones Ronald



Prof.J.Jayaseelan & Dr.Anita Selvakumari



Dr. A David Elangovan & Mr. J.Barnabas

## சேலம் வரலாற்றுச் சங்க சுற்றுப் பயணத்தின் பொழுது




*"Remember the days of old; consider the years of many generations; ask your father, and he will show you, your elders, and they will tell you"*

*(Deut. 32:7 ESVA).*

*We, the People of God are exhorted to keep alive the memory of our faith history and pass it on to our sons and daughters. The Christian Historical Society endeavours to help Tamil-Christian community to fulfill this noble obligation.*

***All praise and glory be to God!***

***Shalom Greetings to you in the name of our Lord and Saviour Jesus Christ!***

*The Christian Historical Society (=CHS) is the fruit of the diligent efforts of numerous Tamil-Christian historians who in the light of Deuteronomy 32:7 seek to document as well as write the faith history of Tamil-Christian community with the active involvement of numerous young volunteers. To cover wider areas where our community has its roots, collaborations are underway with historians and like-minded individuals throughout Tamil Nadu.*

*By God's grace and with prayerful support of Friends, CHS has initiated several activities towards realising its objectives during the past five years since inception. The important ones being:*

- *Publication of the monthly magazine, Kristhava Varalaatru Suvadugal*
- *Reprinting books which contain historical accounts of Tamil-Christian community*
- *Compilation and digitalising of antiquarian texts and documents*
- *Organising Mission Tours to places of historical importance*
- *Establishment of a Library with space for Museum, Research, Seminars etc.*

*Currently, with the benevolent donation of land by a Friend, God has enabled CHS to start the building project for Library cum Research & Development Centre at Surandai. Few individuals are donating and have promised to donate portion of construction material. We need to buy remaining construction material and furnishings for the Library and Seminar Hall.*

*We cordially invite families, individuals and organisations to contribute generously to complete the momentous library building, God willing by June 2024.*

*In God's mission,*

*Manna Selvakumar*
*+91 9176780001*



நரைக்காடு இல்லம்

வரலாற்று நாவல்

# புரட்சிப்புயல் ஏமிகார்மைக்கேல்



முனைவர். ஜான்சி பால்ராஜ்,
திருநெல்வேலி

ஏப்ரல், மே மாதங்களில் தென்பாண்டிநாடான திருநெல்வேலி மாவட்டம் முழுவதுமே பாலைநிலப்பரப்பின் சீதோஷண நிலைக்கு மாறிவிடும் அதிசயம் ஆண்டுதோறும் நடைபெறும். காணுமிடமெங்கும் பசுமையாய் நிறைந்து நின்ற மரஞ்செடி கொடிகளும், புல் பூண்டுகளும் கோடையைத் தரிசித்துவிட்டால், சட்டென தங்களது இயல்பில் திரிந்து இலைகளை உதிர்த்தியும் சருகுகளாக்கியும் விசித்திரமாகக் காட்சி தரும். ஆறு, ஏரி, குளங்களின் கரைகளும் காய்ந்து, பொலிவிழந்த நிலையில் வாய்ப்பிளந்து கிடக்கும்.

ஆனாலும் இந்தியர்களுக்கு ஐவகை நிலப்பரப்பின் சூழலையும் ஏற்று வாழும் உடலமைப்பு இயற்கையாகவே உண்டு. அவர்களது தேகங்களைக் கொஞ்சம் தடுமாற்றமடைய செய்வது கடுங்குளிர்தான்.

ஆனால் பனிமூடிய பிரதேசங்களில் பிறந்து வளர்ந்த ஐரோப்பியர்களின் மென்னுடல் வெப்பத்திற்குத் தாங்காமல் தள்ளாடும். கோடையின் கட்டுக்கடங்காத வெயில் மரணவாசல் வரை அவர்களைக் கொண்டுசெல்லவும் யோசிக்காது. எனவே அக்காலக்கட்டங்களில் ஐரோப்பியர்கள் இந்தியாவின் மலைப்பாங்கான இடங்களைத் தேடிச் செல்வது வழக்கம். ஆண்டு முழுவதும் அவர்களது மனம் குளிர்ச்சியின் மீதுதான் உறைந்து கிடக்கும். அதனிடையே கடமையுணர்ச்சி மட்டும் தான் அவர்களை இயற்கையின் எல்லா கொடுஞ்செயல்களையும் சகிக்க வைத்துக்காப்பாற்றிக் கொண்டிருக்கும்.

கோடைக் காலங்களில், குறிப்பாகத் தமிழகம்வாழ் ஐரோப்பிய மிஷனெரிகள் ஊட்டி, குன்னூர், கொடைக்கானல், மூணாறு, கேரளத்தின் மலைச்சரிவுகள் போன்ற இடங்களில் சென்று குவிந்திருப்பர். ஆனால், ஏமியோ காப்பகத்தில் குழந்தைகள் பெருகத் தொடங்கிய போது அவர்களை விட்டுவிட்டு அப்படிச் செல்ல விரும்பவில்லை. ஆனால் அவரது இந்திய தோழிகள் ஏதாவதொரு மலைவாழிடத்திற்குச் சென்று தங்கியிருந்து வருமாறு வற்புறுத்திக் கொண்டிருந்தனர். அதிலும் காப்பகத்தில் இருந்த தோழியரின் அன்பிற்கு அளவே இராது.

'இந்த நாலு வருசமா நீங்க எங்கேயும் போகலம்மா. அனல் கக்கும் இந்த வெயிலைப் பாருங்க. . . எங்களுக்கே தாங்க




முடியல. இந்த ஆண்டு நீங்க கண்டிப்பாக ஊட்டிக்கு போய் கொஞ்ச நாளாவது தங்கியிருந்துட்டு வாங்கம்மா. ' என்றாள் தேவாயி.

'இல்லையில்லை என்னால் என் குழந்தைகளை இங்கு விட்டுவிட்டு எங்கும் சென்று ஒருநாள்கூடத்தங்க முடியாது சகோதரி' என்ற ஏமியின் கண்கள் கலங்கி நின்றன. 'நாங்கள் பார்த்துக் கொள்ள மாட்டோம் என்று நினைக்கிறாயா ஏமி' என்ற நட்சத்திரத்தின் கை மெல்ல அணைத்தது ஏமியின் தோள்களை.

'அதெல்லாம் இல்லை நட்சத்திரா. . . என்னால் அவர்களை விட்டுப் பிரிந்திருக்க முடியாது என்றேன்' என்று அவளது பாச அணைப்பிற்குள் இருந்தபடி பரிவோடு பார்த்தார் ஏமி.

'சரிமா. . . அப்படியானால் குழந்தைகளையும் அழைத்துக் கொண்டு சென்றுவாங்களேன்' என்ற அவளது வார்த்தைகளில் சாத்தியம் இருப்பதாகத் தெரியவில்லை ஏமிக்கு.

'அம்மா இங்க பாருங்க. . . நீங்க மட்டுமில்ல உங்களோடு அருளாயி, செல்லம்மா, . . . . என்று குழந்தைகளைக் கவனிக்கும் சிலரையும் கூட்டிக் கொண்டு சந்தோசமா போய்ட்டு வாங்க. நாங்க கைக்குழந்தைகள் மூன்றுபேரை மட்டும் இங்கு வைத்துப் பார்த்துக் கொள்கிறோம்'என்றாள் பூரணம். குழந்தைகளோடு செல்லலாம் என்றதும் ஏமிக்கு அகமும் முகமும் மலர்ந்தது. 'அது சரிதான். . . . அப்படியானால் செல்லலாம்' என்றார் அமைதியாக. . ஏமி.

அடுத்த பத்தாவது நாள் குழந்தைகள், நர்சு சகரியா, குழந்தைகள் கவனிப்பில் உதவ சுமதி, செல்லம்மாள், ப்ரீனா ஆகிய சில அக்காமார்கள், ஜெயபாலன் அண்ணாச்சி ஆகியோரை உள்ளடக்கிய குட்டி குடும்பம் ஒன்று பேருந்திலும் புகைவண்டியிலுமாக ஊட்டி சென்று சேர்ந்தது. ஆனால் பெரும் சிரமத்தோடு தான் சேர முடிந்தது. அந்த ஊட்டி குளிர் ஏமியின் உடலையும் மனதையும் சோர்வு நீக்கி இளைப்பாற்றியது. ஆனால் ஓரிரு நாட்களுக்கு மேல் குழந்தைகளாலும் இந்திய அக்காமார்களாலும் மே மாத நீலகிரியின் குளிரையும் சமாளிக்க முடியாமல் சுருண்டனர். அங்கு தங்க வேண்டும் என்று எண்ணிய நாட்களைக் கால்பாகம் கூடக் கடக்க முடியவில்லை. எனவே அனைவரும் விரைவாகவே காப்பகம் திரும்பினர். வரும் வழியிலேயே ஏமி 'மேற்குத் தொடர்ச்சி மலைகளின் அடிவாரத்தில் குழுமியிருக்கும் எங்களுக்கு அங்கேயே ஒரு ஊட்டியைத் தரவேண்டும்' என்று இறைவேண்டல் செய்தபடி அந்த ஆசைகளைத் தனது தோழியரோடும் பகிர்ந்து கொண்டே வந்தார். இறை நம்பிக்கையும் அதன்மீதான பற்றுருதியுமே ஏமியின் சக்திக்கும் மீறிய செயல்களைச் செய்யும் ஆற்றலை அவருக்கு கொடுத்துக் கொண்டிருப்பதாக அவர் அடிக்கடி கூறியிருக்கிறார்.

இந்நிலையில் டோனாவூருக்கு 12 கி. மீ தொலைவில் . 2000 - 2500 அடி உயரத்தில் உள்ளது நரைக்காடு என்ற அழகிய மலைப்பகுதி. அது இஸ்லாமிய நண்பர் ஒருவருக்குச் சொந்தமானது. அதை விற்க இருப்பதாக சில மாதங்களுக்கு முன் அந்த மனிதர் அறிவித்திருந்தார். ஆனால் அவர் எதிர்ப்பார்த்தத் தொகையை ஏமியால் நினைத்தும் பார்க்க இயலாமல் அதை வாங்கும் எண்ணத்தையே விட்டிருந்தார். ஆனால் இப்பொழுது அந்த எண்ணம் இந்த வெறுமையினிடையே எட்டிப்பார்த்து நம்பிக்கையூட்டி அவர் கூடவே பயணித்தது, காப்பகம் வரை. பசுமையான மரங்கள் நிறைந்த அந்த நரைக்காடு என்ற பகுதியானது, இடைவெளிகளை நிறப்பி கிடக்கும் புல்வெளிகள் அவ்வப்போது காற்றால் விலகும் மரங்களுக்கிடையே உள் நுளையும் சூரிய வெளிச்சம், சலசலத்தோடும் சிற்றோடைகள், ஆங்காங்கே தேங்கி கிடக்கும் சிறுசிறு ஏறிகள், எப்போதும் கேட்கும் மெல்லிய பறவைகளின் பாடல்களும் பேச்சொலிகளும், எப்போதாவது அச்சுறுத்தும் யானைக் கூட்டமும் குரங்கு, முயல்கள்

, மர அணில்கள் . . . . என்று மேற்குமலைத் தொடர்ச்சி மலையின் அருகில் அமைந்திருந்தது. கடுமையான முயற்சிகளுக்குப் பின்னர் அது தனது குழந்தைகளுக்கான கோடை வாழிடமாக 1917 ல் வாங்கினார் ஏமி. உடனடியாகத் தங்கி ஓய்வெடுக்க சிறிய அறைகளுடனான வீடும் அங்கு கட்டப்பட்டது.

பின்னர் ஆண்டுதோறும் கோடைகாலம் முழுவதும் அங்கு சென்று ஓய்வெடுத்து வரத் தொடங்கினர். அதன் பின்னர் அனல் பறக்கும் ஏப்ரல் மே மாதங்கள் ஏமியின் குடும்பத்தாருக்கு மட்டும் குளிர்ச்சியான சுற்றுலா காலங்களாகிப்போனது. நடக்க முடியாத குழந்தைகளும் முதியவர்களும் கூட அம்மலையின் மீது டோலிகள் மூலம் தூக்கிச் செல்லப்பட்டனர்.

கோடை முடிந்து மீண்டும் டோனாவூர் திரும்பியதும் குழந்தைகள் மீண்டும் எண்ணத் தொடங்கி விடுவர் 'இன்னும் எத்தனை மாதங்களை நாம் கடக்க வேண்டும் நரைக்காட்டிற்குச் செல்ல?' என்று. . . !

ஒருமுறை ஏமி அங்கு கட்டப்பட்டுக் கொண்டிருந்த கட்டிடங்களைப் பார்ப்பதற்காகத் தனது தோழிகளுடன் அங்குச் சென்றிருந்தார். மாலை வேளை உய்ய். . . என்று இரைந்துக் கொண்டிருந்த காற்றின் சத்தத்தை ரசித்துக் கொண்டே அங்கிருந்த நீண்டு அகன்று கிடந்த புல் தரையின் மீது அமர்ந்திருந்தனர். இருள் சூழ காத்திருந்த அந்த வேளையில் தொலைவில் இருந்த அந்தக் காட்டுப் பகுதியிலிருந்து சருகுகளை மிதித்தபடி யாரோ நடந்து வருவது கேட்டது. சத்தம் மிக அருகில் கேட்க கேட்க ஏமியும் உடனிருந்த தோழிகளும் எழுந்து நின்றனர். பார்வையைக் கூர்மையாக்கினர் சத்தம் வந்த திசையை நோக்கி. . .

ஏமி, 'யாரது' என்று கேட்டார். காட்டுக்குள் இருந்து இரண்டு உருவங்கள் வெளியே வந்து கொண்டிருந்தன. 'அம்மா வந்திருங்க போயிருவோம், அ. . . அ. . . ஆம்பளைங்க' என்றாள் அச்சம் மிகுந்த நட்சத்திரம். இரண்டு பேரும் இணையாக நடந்து வந்து கொண்டிருந்தனர். கையில் நீண்டத் துப்பாக்கி வைத்திருந்தனர். ஆனால் அவர்கள் சற்று தயக்கத்தோடு நடந்து வருவது தெரிந்தது.

'நாம் ஏன் செல்ல வேண்டும், நில்லுங்கள். . . யார் என்று பார்த்து விடுவோம்' என்று கூறியபடி அந்த இருவரையுமே பார்த்தபடி நின்றிருந்தார் ஏமி. தோழிகள் அவருக்குப் பின்பாகத் தயக்கத்தோடு நடுங்கியபடி நின்று கொண்டிருந்தனர்.

அந்த இருவரும் அவர்களுக்கு மிக அருகில் வந்தனர் இருவருமே நல்ல உயரம், கருப்பு, அறையில் முறுக்கிக் கட்டப்பட்ட வேட்டி, திரண்ட உடல்வாகு, கொடுவாள் மீசை, கலங்கிய, சிவந்த கண்கள். தலையில் தலைப்பாகை, பார்ப்பதற்கு அச்சம் தரக்கூடிய தோற்றம். . . ! ஏமி அவர்களது கண்களையே உற்று நோக்கினார். பிறகு அமைதியாக 'நீங்கள் யார்?' என்று கேட்டார். அவர்கள் தங்கள் கையில் வைத்திருந்த துப்பாக்கியைக் கீழே வைத்துவிட்டு தலைக் கவிழ்ந்து நின்றனர்.

'அம்மா நான் செம்புலிங்கம், இவன் காசி. . . என் நண்பன்' என்றான் அமைதியாக. . . . !!

**தொடரும்.**


கிறிஸ்தவ

# வரலாற்றுச் சுவடுகள்

**மாத ஆய்விதழ் சந்தா விபரம்**

| சந்தா விபரம் | உள்நாடு |
|---|---|
| தனிப்பிரதி | ₹ 60 + நன்கொடை |
| ஆண்டு சந்தா | ₹ 600 + நன்கொடை |
| ஐந்து ஆண்டு சந்தா | ₹ 3000 + நன்கொடை |

**வங்கி விபரம்**

Name: Christian Historical Society

A/c Number : 1748 020000 4906

Bank name : Federal Bank

IFSC code: FDRL0001748

"கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்"

மாத ஆய்விதழை நீங்கள் தொடர்ந்து பெற்றுக் கொள்ள

G-Pay மூலம் நன்கொடை செலுத்த 91767 80001 என்ற எண்ணுக்கு செலுத்தவும்

காசோலை மற்றும் வரைவோலை செலுத்த

'கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்'

( Christian Historical Society )

என்ற பெயரில் எடுக்கவும்

**ஆசிரியர்**

**கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்,**

**கதவு எண் 2-2-3(4), வடக்குத்தெரு,**

**பங்களாச் சுரண்டை-627859,**

**தென்காசி மாவட்டம் (தமிழ்நாடு)**

**04633 290401, 91767 80001**

christianhistoricalsociety.in

tchsportal.co.in

christianhistorical@gmail.com



ஜா. ஜான் ஞானராஜ்
கல்லிடைக்குறிச்சி

# கரிசல்பட்டி திருச்சபை வரலாறு

### கரிசல்பட்டி - அமைவிடம்

தென் தமிழகத்தில் திருநெல்வேலி மாவட்டத்தில் திருநெல்வேலியில் இருந்து தென்மேற்கே சுமார் 25 கிலோ மீட்டர் தொலைவில் ஊரைச் சுற்றிலும் குளங்கள் மணிமுத்தாறு பாசனக் கால்வாய் மற்றும் பசுமை நிறைந்த வயல் நிலங்கள் என இயற்கை எழில் சூழ அமைந்த சிறப்புமிகு கிராமம் கரிசல் எனும் கரிசல்பட்டி. சேரன்மகாதேவியில் இருந்து தெற்கே 10 கி. மீ. தொலைவில் களக்காடு செல்லும் நெடுஞ்சாலையில் உள்ள கங்கனான்குளத்தில் இருந்து கிழக்கே மூன்று கி. மீ. தொலைவில் இக்கிராமம் உள்ளது.

### அறிமுகமும் முன்னோர் வழிபாடும்

தென் தமிழ்நாட்டில் உள்ள சிறு தெய்வ வழிபாடான சுடலைமாடசாமி வழிபாட்டில் வழிபடப்படும் சுடலைமாடசாமியின் ஆறாவது நிலையமாக கரிசல்பட்டி குறிப்பிடப்படுகிறது. முற்காலத்தில் இக்கிராமத்தார் அனைவரும் சுடலை மாடசாமியை வழிபட்டு வந்துள்ளனர். இக்கிராமத்தார் அனைவரும் கிறிஸ்தவர்களானதும் குளத்து மேட்டில் இருந்த சுடலை மாடசாமி கோயிலில் வழிபாடு செய்யப்படாமல் இருந்த நிலையில் இக்கிராமத்தில் இருந்து பொழிக்கரைக்கு திருமணமாகிச் சென்ற ரஞ்சிதம் எனும் பெண் மூலம் கரிசலில் உள்ள இக்கோயிலில் இருந்து பிடிமண் எடுத்துச் செல்லப்பட்டு பொழிக்கரையில் ஏழாவது நிலையமாக சுடலை மாடசுவாமி கோயில் கட்டப்பட்டுள்ளது.

### கரிசலில் கிறிஸ்தவம்:

கரிசல்பட்டியில் நெல்லை அப்போஸ்தலர் ரேனியஸ் ஐயரவர்களாலும் அவருடன் பணி செய்த உபதேசியார்களும் செமினரி மாணவர்களும் இணைந்து கரிசலில் 1825 இல் சுவிசேஷம் அறிவித்ததால் இக்கிராமத்தார் அனைவரும் முழுமையாக கிறிஸ்தவத்தை ஏற்றனர். அதன் பயனாக திருச்சபை உருவாக்கப்பட்டது.

### கரிசல் பட்டி ஊரின் உருவாக்கம்:

கரிசல் மற்றும் இடையன்குளம் வட்டாரத்தில் CMS மிஷன் தலைமை மிஷனெரி கனம். ரேனியஸ் ஐயரவர்கள் மூலம் நற்செய்தி அறிவிக்கப்பட்ட 1825-1827 கால கட்டங்களுக்கு முன்பாகவே நாடார் சமூகத்தினர் வாழ்ந்த ஒரு பெருங்கிராமமாக கரிசல்பட்டி உருவாகி இருந்தது. கரிசல் பட்டியில் வசிக்கும் பொதுமக்கள் மத்தியில் உள்ள பாரம்பரிய செவி வழிச் செய்திகளின் அடிப்படையில் சுமார் 300 ஆண்டுகளுக்கு முன்னர் கீழ் காடு என மக்களால் அழைக்கப்படும் தேரி வட்டாரத்தில் இருந்து எட்டு நாடார் சமூகக் குடும்ப வகையறாக்கள் குழுவாக தங்களோடு வாழ்வியலில் இணைந்து செயல்படும் சேவைத் தொழிலாளர்களான குடிமகன் (மருத்துவர்) எனும் சவரத் தொழிலாளர் குடும்பம் மற்றும் வண்ணார் எனும் சலவைத் தொழிலாளர் குடும்பம் ஆகியோரோடு இணைந்து மேற்கு நோக்கி இடப்பெயர்ச்சி செய்து கரிசல்பட்டி கிராமத்தில் குடியேறினர். தாங்கள் வாழ்ந்த பகுதியை ஒன்பது பங்குகளாகப்

பிரித்து தங்கள் எட்டு நாடார் சமூகக் குடும்ப வகையறாக்களுக்கு எட்டு பங்குகளையும் சவர மற்றும் சலவை தொழிலாளர் குடும்பங்களுக்கு சேர்த்து ஒரு பங்கு என ஒன்பது பங்குகளாகப் பிரித்து குடியேறி இருந்தனர். பின்னர் தங்களுக்கு விவசாய பணிகளில் வேலை செய்ய ஆதிதிராவிடர் சமூகக் குடும்பங்களை அழைத்து வந்து அவர்களை கரிசல்பட்டி கிராமத்தின் கிழக்கே குடியேற்றினர்.

**கரிசல்பட்டி பெயர் காரணம்**

புவியியல் - நிலவியல் அடிப்படையில் கரிசல் மண் நிலப்பகுதியில் அமைந்துள்ள கிராமம் (பட்டி) என்ற அடிப்படையில் கரிசல்பட்டி எனும் பெயரை இக்கிராமம் பெற்றுள்ளது. கரிசல் கிராமத்தை கரிசல்பட்டி என குறிப்பிடாமல் கரிசல் என்றே ரேனியஸ் தமது மிஷன் பதிவுகளில் குறிப்பிடுகிறார். ரேனியஸ் ஐயரவர்களுக்குப் பின் CMS தலைமை மிஷனெரி ஆகப் பொறுப்பேற்ற பெற்றிட், டெண்ற் மற்றும் சார்ஜென்ட் ஆகியோரும் கரிசல் என்றே இக்கிராமத்தைக் குறிப்பிட்டுள்ளனர். ஆதலால் பிற்காலத்தில் தான் கரிசல் என்ற பெயருடன் பட்டி என்ற பெயர் சேர்ந்துள்ளது.

**கரிசலில் ரேனியஸின் நற்செய்திப் பணி:**

ரேனியஸ் ஐயரவர்களும் தாவீது, மாசிலாமணி, ஆசீர்வாதம் ஆகிய உபதேசிமார்களும் பாளையங்கோட்டை செமினரியில் படித்து வந்த மாணவர்களும் இணைந்து இடைவிடாது சுற்றியலைந்து செய்த நற்செய்தி பணியால் 1824 இல் நெடுவிளை, கோவிந்தப்பேரி 1825 இல் கரிசல், ஓடைக்கரை, செவல், துவரைக்குளம், துலுக்கப்பட்டி ஆகிய கிராமங்கள் கிறிஸ்தவத்தை ஏற்றன. 1825 இல் கரிசல் கிராமத்தார் முழுமையாக கிறிஸ்தவத்தை ஏற்ற உடன் தங்களது பழைய வழிபாடுகளில் இருந்து அனைவரும் உடனடியாக விலகியதை அறிந்த ரேனியஸ் ஐயரவர்கள் 1825 பெப்ரவரியில் கரிசல் கிராமத்திற்கு வருகை தந்தார்கள். கோயிலில் இருந்தவை அப்புறப்படுத்தப்பட்டு வெளியே போடப்பட்டிருந்தது. அந்த கோயில் தேவாலயம் ஆக மாற்றப்பட்டிருப்பதைக் கண்டு மகிழ்ச்சி அடைந்தார். ரேனியஸ் ஐயரவர்கள் கரிசல் ஊருக்கு வந்த நாளுக்கு அடுத்த நாளில் பிறமத வணக்கத்துக்குரிய பொருட்களை சபையார் எரித்தார்கள். அதன்பின் கரிசல் சபை தலைவனுடைய நிலத்திற்கு சென்றார்கள். கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளும் முன்பாக அந்த நிலத்தில் அவர் கட்டியிருந்த சிறிய பிறமதக் கோவிலை இடித்துத் தரைமட்டமாக்கினார்கள். இச்சம்பவங்கள் ரேனியஸ் கண் முன்பாக நடைபெற்றது போன்றே அவரது குறிப்புகள் உள்ளது.

**ரேனியஸ் கரிசலுக்கு சத்தியநாதனை சபை ஊழியராக நியமித்தல்**

கரிசல் சபை மக்களின் இந்த உறுதியான விசுவாச நம்பிக்கைகளை நேரில் பார்த்த ரேனியஸ் உடனடியாக தம்மோடு வந்திருந்த சபை ஊழியர் சத்தியநாதனை கரிசல் சபைக்கான உபதேசியாராக நியமித்தார். இவர் ஒரு உத்தம ஊழியன் என்றும் சாதுரிய பிரசங்கியார் என்றும் அடிக்கடி கரிசல் கிராமத்தை சுற்றி இருந்த கிராமங்களுக்கும் சென்று நற்செய்தி அறிவித்து வருவார் என்றும் மிஷன் குறிப்புகள் மூலம் அறிந்து கொள்கிறோம். இவரது உண்மை ஊழியம் கரிசல் சுற்றுவட்டார கிராமங்களையும் கிறிஸ்துவண்டைக் கொண்டுவந்தது. கரிசல் கிராமத்திற்கு அவர் வருவதற்கு ஒரு ஆண்டுக்கு முன்பாக கோவிந்தப்பேரியில் சபை ஊழியராக நற்செய்திப் பணியாற்றி அனேகரை கிறிஸ்துவுக்கென்று ஆதாயம் பண்ணி இருந்தார். அவரை கரிசல் கிராமத்திற்கென தனியாக சபை ஊழியராக கரிசலில் தங்கி பணி செய்யும்படி 1825 இல் ரேனியஸ் நியமித்தார். 1829 வரை அந்த பணி தொடர்ந்தது.

**இடையன்குளத்தில் கரிசல் கிராமத்தாரின் ஊழியம்**

கிறிஸ்தவத்தை ஏற்ற கரிசல் கிராமத்தார் தங்களது உறவுமுறைக் கிராமங்களுக்கு கிறிஸ்தவத்தை அறிவிக்க ரேனியஸால் ஊக்கப்படுத்தப்பட்டிருந்தனர். கரிசல் கிராமத்தாரும் கரிசல் உபதேசியாரும் செய்த சுவிசேஷப் பணியால் உறவுமுறைக் கிராமமான இடையன்குளம் கிராமத்தார் கிறிஸ்தவத்தை ஏற்றனர். இடையன்குளத்தில் 1826 முதல் மாற்றம் ஏற்பட்டது. 1827 இல் 10 குடும்பத்தினர் இடையன்குளத்தில் கிறிஸ்தவத்தை ஏற்றதோடு தாங்கள் முன்பு வழிபட்ட கோவிலையே தேவாலயமாக்க தீர்மானம் செய்து பாளையங்கோட்டை சென்று ரேனியஸிடம் இந்த தகவலைத் தெரிவித்தார்கள்.

**கரிசலில் ரேனியஸ் பள்ளிக்கூடம் தொடங்குதல்:**

நாடார் சமூகத்தவரான இராமன் கோவிந்தப்பேரியில் தங்கி தென்மேற்கு நெல்லை மற்றும் மேற்கு நெல்லை வட்டார நாடார் கிராமங்களில் இந்து மதப் பிரச்சாரம் செய்து வந்தார். கோவிந்தப்பேரி மற்றும் கரிசலில் சபை ஊழியம் செய்து வந்த சத்தியநாதன் உபதேசியாரின் பிரசங்கத்தை கேட்டு உள்ளத்தில் மாற்றமடைந்த இராமன் அடிக்கடி கரிசல் கிராமத்திற்கு சென்று அங்கு தங்கியிருந்த சத்தியநாதன் மூலம் கிறிஸ்தவத்தை ஏற்றார். ராமனுக்கு சிறந்த கல்வி அறிவு இருப்பதைக் கண்டுணர்ந்த சத்தியநாதன் உபதேசியார் அவரை அந்த ஆண்டில் 1825 இல் ரேனியஸ் மூலம் தம்மால் தொடங்கப்பட்ட கரிசல் CMS மிஷன் தொடக்கப் பள்ளிக்கு ஆசிரியராக நியமித்தார். கரிசலில் இராமன் நான்கு ஆண்டுகள் ஆசிரியராக பணி செய்தது குறிப்பிடத்தக்கது.

**கரிசல் சபை ஊழியராக இராமன் என்ற யோவான் உபதேசியார்:**

1829 இல் இராமன் என்ற யோவான் கரிசல் சபை ஊழியராக நியமிக்கப்பட்டார். கரிசலில் தொடக்கப்பள்ளி ஆசிரியராக இராமன் தமது பணியைத் தொடங்கினார். ஞானஸ்நான ஆயத்தக்காரராக 1825 முதல் சேர்த்துக் கொள்ளப்பட்ட ராமனுக்கு 10. 10. 1826 இல் யோவான் என்ற பெயரில் ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது.

கரிசலில் தங்கியிருந்து கரிசல், ஓடைக்கரை, கோவிந்தப்பேரி, செவல், ஆகிய கிராமங்களில் இராமன் என்ற யோவான் சபை ஊழியர் பணியைத் திறம்பட செய்து வந்தார். கரிசல் சபையில் ஞானஸ்நான ஆயத்தக் காரியாயிருந்த சந்தானம் அம்மாளை இராமர் என்ற யோவான் உபதேசியார் திருமணம் செய்திருந்தார். இத்தம்பதியருக்கு 1834 இல் பெண் குழந்தையும் பிறந்தது. 22. 03. 1835 இல் இராமர் என்ற யோவான் உபதேசியாரின் மனைவி சந்தானம் அம்மாள் மற்றும் உபதேசியாரின் ஆறு மாத பெண் குழந்தை ஆகியோருக்கு பரிபூரணம் மற்றும் பாக்கியம் என்ற பெயர்களில்

கரிசல் தேவாலயத்தில் ஜான் தேவசகாயம் ஐயரவர்களால் ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது.

**ரேனியஸ் ஐயரவர்களுக்குப் பின் கரிசல் சபை**

1835 இல் இரேனியஸ் ஐயரவர்கள் CMS மிஷன் தலைமை கண்காணிப்பு மிஷனெரி பொறுப்பில் இருந்து பணி நீக்கம் செய்யப்பட்டார்கள். முதலில் இதன் காரணமாக 1835 ஜூனில் திருநெல்வேலியை விட்டு வெளியேறி தூத்துக்குடி சென்று கடல் மார்க்கமாக சென்னை சென்று பின்னர் ஆற்காட்டை தலைமையிடமாகக் கொண்டு ஜெர்மன் இவாஞ்சலிக்கல் மிஷன் எனும் மிஷனெரி சங்கத்தை நிறுவி சிறப்பாக ஊழியம் செய்து வந்த நிலையில் திருநெல்வேலி மாவட்ட உபதேசியார்கள் அவரை மீண்டும் திருநெல்வேலிக்கு வந்து மிஷன் ஊழியத்திற்கு தலைமை தாங்குமாறு கண்ணீர் கடிதங்களை அனுப்பியதால் அதை ஏற்று திருநெல்வேலி மாவட்டத்தில் சிந்துபூந்துறையில் மிஷன் வீடு கட்டி ஊழியத்தைத் தொடர்ந்தார். திருநெல்வேலி - கன்னியாகுமரி நெடுஞ்சாலைக்கு மேல்புறம் இருந்த பெரும்பாலான சபைகள் பெற்றிட் தலைமையிலான CMS மிஷனில் இருந்து விலகி ரேனியஸ் பக்கம் சேர்ந்தன. அவை மேல் பக்கத்தார் எனப்பட்டது. சில சபைகள் பெற்றிட் பக்கம் நின்றன. சில சபைகள் இருபக்கமும் சில சபைகள் இருபக்கமும் சேராமல் நடுநிலையும் வகித்தன. 1838 இல் ரேனியஸ் ஐயரவர்கள் மரணமடைந்தார்கள். மேய்ப்பன் இல்லாத ஆடுகளாக நின்ற மேல் பக்கத்தார் சபைகள் படிப்படியாக பெற்றிட் தலைமையிலான CMS மிஷனில் சேர்ந்தன. கரிசல் சபை எந்த நிலையை எடுத்தது என்பதை முழுமையாக அறிய இயலவில்லை.

**டோனாவூர் மிஷனெரி கனம். டென்ற் மேற்பார்வையில் கரிசல் சபை**

1836 இல் டோனாவூர் மிஷனெரி கனம். டென்ற் மேற்பார்வையில் கரிசல் சபை இருந்தது குறித்து மிஷன் குறிப்புகளில் அறிகிறோம். 1835 இல் கரிசல் சபை ஊழியர் யோவான் உபதேசியார் செவலுக்கு மாற்றம் செய்யப்பட்ட நிலையில் நிர்விசாரங்கள், இந்து சடங்காச்சாரங்கள் கரிசலில் புகுந்தன. இதை அறிந்த கனம். டென்ற் தமக்கு கீழ் பணி செய்த பக்தியும் திறமையும் மிகுந்த சபைஊழியர் ஒருவரை 1836 இல் கரிசலுக்கு நியமித்தார். புதிய சபை ஊழியர் தமது சிறந்த உபதேசத்தினாலும் முன்மாதிரியான வாழ்க்கையினாலும் கரிசல் சபை மக்கள் மனம் மாறுவார்கள் என எதிர்பார்த்தார். ஆனால் எவ்வித மாற்றமும் இல்லை. கரிசல் சபையில் கட்சி பிரிவினைகள், சண்டைகள், இந்துக் கிரியைகள் மிகுந்து காணப்பட்டது. கரிசல் சபையின் இந்நிலையை அறிந்தவராக இரண்டு ஆண்டுகளுக்கு பின் 1838 இல் கரிசல் சபையை சந்தித்து மேற்பார்வை செய்ய டோனாவூர் மிஷனெரி டென்ற் வருகை தந்தார்.

**கரிசல் சபை குறித்து டென்ற் எடுத்த பயங்கர முடிவு**

1838 ஆம் ஆண்டு தொடக்கத்தில் கரிசல் சபையை சந்தித்து விசாரணை செய்த டோனாவூர் வட்டார மிஷனெரி டென்ற் சபையாரின் நிலையைக் கண்டு மனவருத்தமும் மனவேதனையும் அடைந்தவராக இந்த சபையில் நாம் செய்யும் ஊழியம் பயனற்றது. இந்த சபையை நாம் கைகழுவி விடுவோம், சபை பட்டியலில் இருந்து கரிசல் சபையை நீக்கிவிடுவோம் மற்றும் கரிசல் சபை ஊழியராகிய உங்களை வேறு ஊருக்கு மாற்றிவிடுகிறேன் எனக் கூறினார். ஆனால் அந்த பயங்கர முடிவை மறுபரிசீலனை செய்யுமாறு அய்யா கொஞ்சம் பொறுத்துப் பாருங்கள் என கண்ணீர் மல்க உபதேசியார் பதில் கூறினார். அடுத்து அவரால் பேச இயலவில்லை துக்கம் தொண்டையை அடைத்தது விம்மிக் கொண்டே நின்றார். இதைக் கேட்டதும் கோபம் கொண்ட டென்ற் உடனடியாக தன் குதிரை மீது ஏறியவராக அந்த இடத்தை விட்டு வேகமாக வெளியேறினார். இதைக் கண்ட கரிசல் சபை ஊழியர் உடனடியாக கரிசலில் அமைக்கப்பட்டிருந்த ஜெபாலயத்துக்கு சென்று ஆண்டவரை நோக்கி கரிசல் சபையார் மனந்திரும்பும்படி கண்ணீரோடு ஜெபித்தார்.

**16 மாதங்களில் கரிசலில் ஏற்பட்ட மாபெரும் எழுப்புதல்**

கரிசல் சபை மக்களின் பின்மாற்றத்தை நேரில் கண்ட டோனாவூர் வட்டார தலைமை மிஷனெரி டென்ற் ஐயரவர்கள் கோபத்துடன் கரிசலை விட்டுப் புறப்பட்டுச் சென்றது முதல் அதிக ஜெபத்தோடு கரிசல் சபை ஊழியர் கரிசல் கிராமத்தாரில் பின்மாற்றம் அடைந்தவர்களை மீண்டும் மனந்திரும்பச் செய்யும் சுவிசேஷப் பணியைச் சிறப்பாக செய்து வந்தார். கரிசல் உபதேசியாரின் கண்ணீர் ஜெபத்தோடு கூடிய நற்செய்தி பணியால் 16 மாதங்களில் கரிசல் சபையில் மாபெரும் எழுப்புதல் ஏற்பட்டது. 1840 க்குள் கரிசல் கிராமத்தார் அனைவரும் மீண்டும் கிறிஸ்தவர்கள் ஆகினர். ஏற்கனவே ரேனியஸ் ஐயரவர்கள் காலத்தில் 1825 இல் கரிசல் கிராமத்தார் அனைவரும் கிறிஸ்தவர்கள் ஆனதை நாம் அறிந்தோம்.

**1849 இல் ஏற்பட்ட பெரும் உபத்திரவம்**

1849 ஆம் ஆண்டின் சர்ச் மிஷன் ரிப்போர்ட்டில் (CMR) கரிசல் சபை சார்ந்த குறிப்புகள் காணப்படுகின்றன. அதில் 1849 இல் கரிசல் சபை பெரும் உபத்திரவத்தில் சிக்கி தவித்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் எத்தகைய உபத்திரவம் என்பது குறித்து அதில் குறிப்பிடப்படவில்லை.

**கூறைவேயப்பட்ட கட்டிடத்தில் முதல் தேவாலயம்** (ஜெபாலயம்)

நெல்லை அப்போஸ்தலர் ரேனியஸ் ஐயரவர்கள் காலத்தில் 1825 இல் சபை ஊழியர் ஆக நியமிக்கப்பட்ட சத்தியநாதன் உபதேசியார் அவரைத் தொடர்ந்து நியமிக்கப்பட்ட ராமர் என்ற யோவான் உபதேசியார் அவருக்கு பின்னர் டோனாவூர் வட்டார தலைமை மிஷனெரி டென்ற் ஐயரவர்களால் நியமிக்கப்பட்ட புதிய சபை ஊழியர் ஆகிய இவர்களது காலத்திலேயே பனை ஓலையை மேற்கூறையாக கொண்ட ஜெப ஆலயம் அமைக்கப்பட்டிருந்தது என்பதை சர்ச் மிஷன் ரிப்போர்ட் குறிப்புகள் மூலம் அறிகிறோம். இந்த தேவாலயமே முதல் தேவாலயம்.

இந்த தேவாலயம் கரிசல் கிராமத்தார் கிறிஸ்தவத்தை ஏற்றுக் கொள்ளும் முன்பு ஊர் கோவிலாக வணங்கி வழிபட்ட கோவில் இருந்த இடத்திலேயே செயல்பட்டது என்ற குறிப்புகளையும் சர்ச் மிஷன் ரிப்போர்ட்களில் (CMR) பார்க்கிறோம் பார்க்கிறோம். .

**கரிசலில் தேவாலயம் கட்டப்பட அடிக்கல் நாட்டப்படுதல் (1860)**

முதன்முதலாக காரைக் கட்டிடத்தில் பெரியதொரு

தேவாலயம் கட்ட ஒன்பது பங்காக கரிசல் கிராமம் பிரிக்கப்பட்ட சூழலில் அதில் ஒரு பங்கு நிலம் தேவாலயத்திற்கு என கரிசல் கிராமத்தார் தனியே வைத்திருந்ததாக அந்த இடத்தில் தேவாலயம் கட்டுவதற்கு 1860 இல் அடிக்கல் நாட்டப்பட்டதாக பாரம்பரிய செவி வழிச் செய்தி சொல்லப்படுகிறது. அஸ்திவாரம் முதல் தளவரிசை வரையிலான பணிகள் நடைபெற்று இருந்தது.

### 1871 இல் கரிசல் சபை

1871 இல் கரிசல் விசாரணை உபதேசியார் ஆக திரு. R. வேதநாயகம் உபதேசியார் கரிசலில் தங்கி பணி செய்து வந்துள்ளார். இந்த வேதநாயகம் உபதேசியாரின் மகனே புகழ்வாய்ந்த குருவானவரும் ஆர்ச் டீக்கன் ஆகப் பணி செய்த வருமான கனம் . R. V. ஆசீர்வாதம் ஐயரவர்கள். இவர் தம் தந்தை கரிசல் சபையின் விசாரணை உபதேசியாராகப் பணி செய்த போது கரிசலில் பிறந்தவர்.

### 1881 இல் மீண்டும் கட்டுமானப்பணி தொடக்கம்

பல ஆண்டுகள் தேவாலய கட்டுமான பணிகள் நடைபெறவில்லை. இது குறித்து சர்ச் மிஷன் ரிப்போர்ட் குறிப்புகளில் பார்க்கிறோம். 1881 இல் மீண்டும் தேவாலயக் கட்டுமானத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டு தொடக்கப்பணிகள் நடைபெற்றதாக சர்ச் மிஷன் ரிப்போர்ட் குறிப்புகளில் பார்க்கிறோம். ஆனாலும் 1890 வரை பணிகள் வேகமாக நடைபெறவில்லை.

### கரிசல் தேவாலயக் கட்டுமானம் 1890 இல் மீண்டும் தொடக்கம்

தளவரிசை நிலையில் நின்று போயிருந்த கரிசல் தேவாலயக் கட்டுமானப் பணி 1890 இல் மீண்டும் தொடங்கப்பட்டு வேகமாகக் கட்டுமானப் பணிகள் நடைபெற்றன இதற்கு அக்காலத்தில் கரிசலில் தங்கி குருவானவர் பணியைச் செய்த கனம். மாணிக்கம் மாசிலாமணி ஐயரவர்கள் முக்கிய காரணமாக இருந்துள்ளார்கள். இங்கு தங்கி பணி செய்த முதல் குருவானவராக இவர் பணி செய்துள்ளார் என அறியமுடிகிறது. தொடக்கக் காலத்தில் இவர் சபை ஊழியராக இருந்து பின்னர் குருத்துவக் கல்வி கற்று குருவானவராக மாறியிருக்க வேண்டும் ஏனென்றால் இவரைக் குறித்து சில குறிப்புகளில் கனம். மாணிக்கம் மாசிலாமணி உபதேசியார் என்றும் போடப்பட்டிருக்கிறது.

### கரிசல் தேவாலய கட்டுமான பணியில் கார் மிஷனெரி

கரிசல் தேவாலயக் கட்டுமானப் பணியில் கூடுதல் அக்கறை காட்டியவர்களில் அக்காலத்து சி எம் எஸ் மிஷனெரிகளில் முக்கியமானவரும், திருநெல்வேலி திருமண்டல சர்ச் கவுன்சில் துணைத்தலைவர் பொறுப்பில் அக்காலத்தில் இருந்தவரும் பிற்காலத்தில் 1897 முதல் 1915 வரை தலைமை கண்காணிப்பு மிஷனெரி மற்றும் திருநெல்வேலி திருமண்டல சர்ச் கவுன்சில் தலைவர் (District Church Council Chairman) ஆகப் பணி செய்த கார் மிஷனெரி என அனைவராலும் அன்புடன் அழைக்கப்பட்ட கனம். E. S. கார் ஐயரவர்கள் ஆவார். அக்காலத்தில் தேவாலயங்களுக்கான புதிய இடங்களை வாங்குவது, தேவாலயங்கள் கட்டுவது பள்ளிக்கூடங்கள் கட்டுவது என அவர் பல பணிகளைச் செய்தார்.

கரிசல் தேவாலய கட்டுமான பணியில் கார் மிஷனெரி அவர்கள் முக்கியமான பங்காற்றினார் என்பதை சர்ச் மிஷன் ரிப்போர்ட் குறிப்புகளில் தெளிவாகப் பார்க்க முடிகிறது. .

### கரிசல் தூய. பவுல் தேவாலய பிரதிஷ்டை

கரிசல் தேவாலயம் அக்காலத்தில் திருநெல்வேலி திருமண்டல சர்ச் கவுன்சில் துணைத்தலைவரும் கரிசல் திருச்சபையை நேசித்தவருமான கார் மிஷனெரி என்றழைக்கப்பட்ட கனம். E. S. கார் ஐயரவர்களின் தலைமையில் திருவாங்கூர் பேராயர் மகாகனம். எட்வர்டு நோயல் ஹ்யூஜ்ஸ் அவர்களால் தூய. பவுல் தேவாலயம் என்ற பெயரில் 16. 02. 1994 அன்று பிரதிஷ்டை செய்யப்பட்டது. பிரதிஷ்டை ஆராதனையில் கூடன்குளம் சேகர குருவானவர் கனம். தானியேல் ஐயரவர்கள் மற்றும் சேரன்மகாதேவி குருவானவர் கனம். D. M. பாக்கியநாதன் ஐயரவர்கள் ஆகியோர் பங்கேற்றனர். 1894 இல் திருநெல்வேலி திருமண்டலத்திற்கென தனி பேராயர் இல்லை. ஆதலால் கார் மிஷனெரி ஏற்பாட்டில் திருவனந்தபுரம் பேராயர் கரிசல் தூய. பவுல் தேவாலயத்தைப் பிரதிஷ்டை செய்தார். 100 ஆண்டுகளுக்கு முன்பு 1924 இல் சி. எம். எஸ். சபைகளுக்குள் ஏற்பட்ட சுத்தாங்க சபை பிளவு. அதைத் தொடர்ந்து 1924 இல் உருவாக்கப்பட்ட CMS சுத்தாங்க சுவிசேஷ திருச்சபை வரும் வரை இந்த தூய. பவுல் தேவாலயமே கரிசல் திருச்சபை மக்களுக்கான ஒரே தேவாலயமாக செயல்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது.

CMS மற்றும் SPG ஆகிய இரு மிஷன் சபைகளின் முழு நிர்வாக அதிகாரங்களுடன் பொறுப்பேற்ற பேராயர் மகாகனம் உவாலர் அவர்களின் செயல்பாடுகளும் சுத்தாங்க சபை பிளவுக்கான தொடக்கமும் கரிசலில் அதன் தாக்கமும் இரு மிஷன்களுக்கும் பொதுவான பேராயராக 1896 இல் மகாகனம். மார்லி அவர்களும் அவருக்குப் பின் மகாகனம். A. A. வில்லியம்ஸ் அவர்களும் அவருக்குப் பின் 08. 12. 1915 இல் மகாகனம் உவாலர் அவர்களும் பொறுப்பேற்றார்கள். இம்மூவரும் சடங்காச்சாரங்களில் பற்று கொண்டவர்களாக இருந்தனர் என ஓர் கருத்து கூறப்படுகிறது. ஆனால் நிர்வாக அதிகாரம் CMS தலைமை கண்காணிப்பு மிஷனெரியிடம் அக்காலத்தில் (1897 முதல் 1915) வரை CMS தலைமை கண்காணிப்பு மிஷனெரியாக இருந்த கார் மிஷனெரி CMS இன் அடிப்படைக் கொள்கையான சடங்காச்சாரங்கள் அற்ற சுத்த சுவிசேஷம் என்பதில் உறுதியாக இருந்ததால் முதலில் பொறுப்பேற்ற இரு பேராயர்களால் சடங்காச்சாரங்களை CMS சபைகளில் நடைமுறைப்படுத்த இயலவில்லை. மேலும் அக்காலத்தில் மகாகனம். A. A. வில்லியம்ஸ் பேராயர் அவர்களுக்கு பின்பு 28. 11. 1915 இல் பேராயராக வந்த மகாகனம். உவாலர் அவர்கள் இரு மிஷன் சபைகளின் நிர்வாக அதிகாரம் தம்மிடம் தரப்பட்டால் தான் தாம் ஊழியப் பணிகளைச் சிறப்பாகச் செய்ய முடியும் என பதவி ஏற்கும் முன்பே கூறி நிர்வாக அதிகாரத்தைப் பெற்றுக் கொண்டவராகவே பேராயர் பொறுப்பை ஏற்றார்.

11 & 12. 10. 1917 ஆகிய இரு நாட்களில் இரு மிஷன் சபைகளின் வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட அத்தியட்சாதீன ஆலோசனை அமைப்பு பேராயரால் நிறுவப்பட்டு அது கூட்டப்பட்டது.

93 குருவானவர்கள், 135 சபை (லே) அங்கத்தினர்கள்

பங்கேற்றனர். அந்த அத்தியட்சாதீன ஆலோசனை அமைப்பிலிருந்து பேராயரைத் தலைவராகக் கொண்ட அத்தியட்சாதீன நிர்வாக சபை (Executive Committee) அவரால் அமைக்கப்பட்டது. மேற்கண்ட இரு நிர்வாக சபை குறித்து அப்போதைய சீனியர் CMS குருவானவர் Rev. R. F. ஆர்டில் அவர்கள் தலைமையில் CMS குருக்களும் சபையாரும் வலிமையான எதிர்ப்பை தெரிவித்தார்கள் ஆனால் அது பயனில்லாது போய்விட்டது.

07. 04. 1918 இல் நாசரேத்தில் கூடிய அத்தியட்சாதீன நிர்வாக சபையில் இரு மிஷன் சபைகளுக்குமான சொத்துக்கள் Tirunelveli Diocesan Trust Association - TDTA பெயரில் கொண்டு வரப்பட்டு 1919 முதல். நடைமுறைக்கு வந்தது. 1919 இல் நூற்றாண்டு மண்டபத்தில் இரு மிஷனெரி சங்க போதகர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட சபை உறுப்பினர்கள் அடங்கிய ஐக்கிய கூட்டத்தில் இரு மிஷன் சபைகளுக்கும் உண்டான அனைத்து தேவாலயங்களிலும் ஆல்டர் திருமேசையில் சிலுவை வைக்கப்பட வேண்டும் என்ற தீர்மானம் முன்மொழியப்பட்டது. அந்த தீர்மானத்திற்கு CMS மிஷன் போதகர் Rev. சாலமோன் பாக்கியநாதன் தலைமையில் CMS போதகர்களும் சபை கமிட்டி உறுப்பினர்களும் வலிமையான எதிர்ப்பை தெரிவித்தார்கள்.

1924 இல் அக்கால திருநெல்வேலி மாவட்ட SPG மற்றும் CMS மிஷன்களின் நிலை இரு மிஷன்களையும் சார்ந்த கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை சுமார் ஒரு லட்சத்து பன்னிரெண்டாயிரம் அதில் CMS மிஷன் சபையார் 79, 000 மற்றும் SPG மிஷன் சபையார் சடங்காச்சாரங்களை, எீனிறீ சபைகளுக்குள் நடைமுறைப்படுத்த முயற்சித்தல் எஸ். பி. ஜி மற்றும் சி. எம். எஸ். மிஷன் சபைகள் இணைப்பால் சுத்தாங்க சுவிசேஷம் எனும் CMS மிஷனின் அடிப்படைக் கோட்பாட்டில் மாற்றம் ஏற்பட்டு விடும் என்ற கவலை கொண்ட C M. S. சபை குருவானவர்கள், பெரியோர்கள், இந்த ஐக்கிய திட்டத்தை ஏற்கவில்லை. அந்த நேரத்தில் சி. எம். எஸ் மிஷன் கோட்பாடுகளில் எவ்வித மாற்றமும் செய்யப்படமாட்டாது என்ற வாக்குறுதிகள் CMS மிஷன் சபையாருக்கு கொடுக்கப்பட்டது. ஆனால் அவை உடனடியாகவே மீறப்பட்டது. அந்நேரமே கோவில்பட்டி CMS தேவாலய ஆல்டர் திருமேஜையின் மீது சிலுவையும் விளக்குத் தண்டும் வைக்கப்பட்டது. மேற்கண்ட காரியங்கள் ஆழ்வாநேரி மற்றும் செவல் சர்க்கிளுக்குட்பட்ட சபைகளில் பெரும் எதிர்ப்பை ஏற்படுத்தி சபை பிளவுக்கு வழி வகுத்தது

SPG & CMS மிஷனெரி சங்க சபைகளை இணைத்து ஒரே நிர்வாக அமைப்பு கொண்ட டயோசிசன் அமைப்பதற்காக பேராயர் மகாகனம். டப்ஸ் நடத்திய ஐக்கிய கூட்டங்கள் (1924)

மகாகனம். நார்மன் ஹென்றி டப்ஸ் அவர்கள் 25. 07. 1923 இல் தாம் பொறுப்பேற்ற உடன் SPG மற்றும் CMS மிஷனெரி சங்க சபைகளை இணைத்து ஒரே நிர்வாக அமைப்பு கொண்ட டயோசிசன் அமைப்பதற்கான ஐக்கிய கூட்டங்கள் நடத்த திட்டமிட்டார்கள். முதல் கூட்டம் 14. 12. 1923 இல் நடத்த திட்டமிடப்பட்டது. ஆனால் பெருவெள்ளம் காரணமாக போக்குவரத்து தடைபட்டு இருந்ததால் முதல் கூட்டம் ஒத்தி வைக்கப்பட்டது. இரண்டாம் கூட்டம் 10. 01. 1924 அன்று நடத்த திட்டமிடப்பட்டது. ஆனால் பெருமழை காரணமாகவும் தேவையான அங்கத்தினர்கள் பங்கு பெறாதபடியினாலும் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது. மூன்றாம் கூட்டத்தை 11. 03. 1924 அன்று பேராயர் மகாகனம். டப்ஸ் அவர்கள் காய்ச்சலோடு நடத்தினார்.

ஐக்கிய கூட்டத்தில் பங்கு பெற்றிருந்த 247 பேரில் 100 குருவானவர்கள் 147 தேர்ந்தெடுக்கப்பட்ட சபை பிரதிநிதிகள் ஆக 247 பேரில் 242 பேர் ஐக்கியத்தை ஏற்றுக்கொள்வதாக சம்மதம் தெரிவித்தனர். அந்நேரம் ஆழ்வாநேரி மற்றும் செவல் சர்க்கிளைச் சார்ந்த பெரியோர் மேடை மீது ஏறி தங்கள் கையில் வைத்திருந்த எதிர்ப்பு பத்திரத்தை பேராயரிடம் சமர்ப்பித்தார்கள். ஐக்கிய கூட்டத்தில் பெரும்பான்மை ஆதரவு 242/247 என்ற அடிப்படையில் இரு மிஷன் சங்கங்களின் ஐக்கியத் தீர்மானம் நிறைவேற்றியது.

திருநெல்வேலி CMS சுத்தாங்க சுவிசேஷ திருச்சபையின் தொடக்கம் 24. 05. 1924 அன்று இடையன்குளத்தைத் தலைமையிடமாகக் கொண்டு திருநெல்வேலி சி. எம். எஸ். சுத்தாங்க சுவிசேஷ திருச்சபை கீழ்க்கண்ட ஆறு பெரியோர்கள் மூலம் நிறுவப்பட்டது

1. கனம். அருள் மாணிக்கம் ஐயரவர்கள்,
2. கனம். T. வேதக்கண் ஐயரவர்கள்,
3. கனம். P. சாலமோன் பாக்கியநாதன் ஐயரவர்கள்,
4. தாசில்தார் மோசஸ் சீனிவாசகம் அவர்கள்,
5. மாவட்ட விவாக ரிஜிஸ்ட்ரார் ஜான் V. சாமுவேல் அவர்கள்,
6. சங்கை. சுவிசேஷகர். தாவீது ஐயா அவர்கள்.

1924 இல் திருநெல்வேலி CMS சுத்தாங்க சுவிசேஷ திருச்சபை தொடங்கப்பட்ட காலத்தில் 60 சபைகளும் 10, 000 கிறிஸ்தவர்களும் இருந்தனர்.

**கரிசலில் திருநெல்வேலி CMS சுத்தாங்க சுவிசேஷ திருச்சபை**

செவல் சர்க்கிளுக்கு உட்பட்ட சபைகளில் பெரிய சபையாக இருந்த கரிசல் சபையின் சபை ஊழியர் சுவிசேஷகர். தாவீது ஐயா சடங்காச்சாரங்கள் அற்ற சுத்த சுவிசேஷ கொள்கையில் உறுதி உடையவர் அவர் கரிசல் சபை மட்டுமல்லாது கரிசலைச் சுற்றி இருந்த சபைகளிலும் நல்ல செல்வாக்கோடு இருந்தபடியால் அவர் 1924 இல் நிறுவப்பட்ட திருநெல்வேலி CMS சுத்தாங்க சுவிசேஷ திருச்சபையின் ஆறு நிறுவனர்களில் ஒருவராக இருந்ததோடு மட்டுமல்லாமல் செவல் சர்க்கிளில் இந்த சபை பெரும்பாலான கிராமங்களில் குருவாக காரணமாகவும் இருந்தார்.

1924 இல் கரிசலில் கரிசல் சபை ஊழியர் சங்கை சுவிசேஷகர் தாவீது ஐயா அவர்களும் கரிசல் சபையாரும் செய்த உடன்படிக்கை

சுவிசேஷகர் தாவீது உபதேசியார் அவர்கள் கரிசல் சபை பெரியவர்களைக் கலந்தாலோசித்து கரிசலில் CMS சுத்தாங்க சுவிசேஷ சபை எனும் ஒரே சபையாகவே நீடிக்க சபையார் வாக்குறுதி அளிக்கும் வகையில் உடன்படிக்கை பத்திரம் தயார் செய்தார்கள். அக்காலத்தில் கரிசல் சபையில் 61 குடும்பத்தினர் இருந்தனர். அதில் ஐம்பத்தி ஆறு குடும்பத் தலைவர்கள் 03. 08. 1924 அன்று பத்திரத்தில் கையெழுத்திட்டனர். இந்த உடன்படிக்கை பத்திரத்தில் கீழ்க்கண்ட 5 குடும்பத்தினர் கையெழுத்திடவில்லை .



- ஆ. ஞானக்கண் நாடார்
- ச. துரைச்சாமி நாடார்
- ஞா. ரா. ஞானக்கண் நாடார்,
- ஞா. செ. கோயில்பிச்சை நாடார்,
- ஞா. சா. பொன்னையா நாடார்

பத்து ஆண்டுகளாக ஆராதனை நடைபெறாத நிலையில் இருந்த கரிசல் டயோசிசன் சபை தூய. பவுல் ஆலயம் திறக்கப்படுதல் கரிசல் கிராமத்தார் அனைவரும் தொடக்க கால முதல் வழிபட்டு வந்த கரிசல் தூய. பவுல் தேவாலயம் 1924 முதல் சுமார் பத்து ஆண்டுகளாக மூடப்பட்ட நிலையில் இருந்தது என்றும் கிராமத்தார் அனைவரும் புதிதாக ஓலையை மேற்கூறையாக கொண்ட சுத்தாங்க சுவிசேஷ சபை புதிய தேவாலயத்தில் ஆண்டவரை வழிபட்டு வந்தனர். பத்து ஆண்டுகள் ஆன நிலையில் உடன்படிக்கை பத்திரத்தில் கையெழுத்திடாத ஐந்து குடும்பத்தினர் டயோசிசன் அலுவலகம் சென்று தாங்கள் டயோசிசன் சபைக்கு வர விரும்புவதாக வேண்டிக்கொண்டார்கள். ஐந்து குடும்பத்தினர் டயோசிசன் சபையில் சேர்ந்ததால் பத்து ஆண்டுகளுக்கு பின்னர் தூய. பவுல் தேவாலயம் திறக்கப்பட்டது.

**கரிசல்பட்டி CSI தூய. பவுல் தேவாலய திருச்சபையின் தற்போதைய நிலை**

கரிசல்பட்டி CSI தூய. பவுல் தேவாலயம் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு இடிக்கப்பட்டு அதே இடத்தில் பெரிதான அளவில் புதிய தேவாலயம் கட்டப்பட்டு வருகிறது. கரிசல்பட்டி CSI தூய. பவுல் தேவாலய திருச்சபையில் 40 கிறிஸ்தவ குடும்பத்தினர் உள்ளனர். 160 ஞானஸ்நானம் பெற்ற கிறிஸ்தவர்கள் உள்ளனர். 2000 ஆவது ஆண்டு முதல் திரு. ஜான் அவர்கள் சபை ஊழியராக பணி செய்து வருகிறார்கள். கரிசல்பட்டி சேகர தலைவராக கனம். ஆரோன் துரைராஜ் ஐயரவர்கள் பணி செய்து வருகிறார்கள்.

**கரிசல்பட்டி CMS சுத்தாங்க சுவிசேஷ சபை தூய. காபிரியேல் தேவாலய சபையின் தற்போதைய நிலை**

கரிசல்பட்டி CMS சுத்தாங்க சுவிசேஷ சபை தூய. காபிரியேல் தேவாலயத்தில் முன்பகுதியில் விரிவாக்கப்பணி சுமார் 3 ஆண்டுகள் நடைபெற்றது. 2019 இல் விரிவாக்கம் செய்யப்பட்ட தேவாலயம் பிரதிஷ்டை செய்யப்பட்டது. இன்று கரிசல்பட்டி தூய. காபிரியேல் தேவாலய திருச்சபையில் சுமார் 300 குடும்பத்தினர் உள்ளனர்.


கரிசல்பட்டி CMS சுத்தாங்க சுவிசேஷ சபையின் சபை ஊழியராக திரு. P. S. சாமுவேல் உபதேசியார் அவர்கள் 11. 06. 1989 முதல் பணி செய்து வருகிறார்கள். கரிசல்பட்டி CMS சுத்தாங்க சுவிசேஷ சபை சேகர குருவானவர் ஆக கனம். கெர்சோம் ஐயரவர்கள் பணி செய்து வருகிறார்கள். கரிசல்பட்டியில் CMS சுத்தாங்க சுவிசேஷ சபை சார்பில் தொடக்கப் பள்ளியும் CMS சுவிசேஷகர் தாவீது நினைவு மேல்நிலைப் பள்ளியும் நடைபெற்று வருகிறது.

கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்

கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம் நடத்தும் கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள் மாத ஆய்விதழை நண்பர்கள், உறவினர்களுக்கு அறிமுகப்படுத்த அன்போடு கூட கேட்டுக் கொள்ளுகின்றேன். கடந்த நான்கு வருடங்களாக ஒவ்வொரு மாதமும் தொடர்ந்து வெளி வந்து கொண்டு இருக்கின்றது. மறைக்கப்பட்ட, மறைந்த, மறந்த வரலாற்றுப் பக்கங்களை அடுத்த தலைமுறையினரின் கரங்களில் கொடுப்பது நம் கடமை.

சங்கத்தின் 'கிறிஸ்தவ வரலாற்று சுவடுகள்' மாத ஆய்விதழை நீங்கள் தொடர்ந்து பெற்றுக் கொள்ள விரும்பினால் அதற்கான ஆண்டு சந்தா 600 ரூபாய் ஐந்து ஆண்டுக்கான சந்தா 3000 ரூபாய் மட்டுமே. மற்றும் G-Pay மூலம் நன்கொடை செலுத்த விரும்பினால் 91767 80001 என்ற எண்ணுக்கு செலுத்தவும். காசோலை மற்றும் வரைவோலை செலுத்த 'கிறிஸ்தவ வரலாற்று சங்கம்' (Christian Historical Society) என்ற பெயரில் எடுத்து அனுப்பவும்.

நன்கொடை சந்தா செலுத்திய தகவலை கொடுக்கப்பட்டுள்ள தொலைபேசி எண் அல்லது வாட்ஸ் ஆப் அல்லது மின்னஞ்சல் முகவரிக்கு மறக்காமல் தெரியப்படுத்தவும்.



# அதிசயங்களை என்னும்

# ஞானப்பாட்டு



J. S.

இப்பிரார்த்தனையைப் பாடின மார்ட்டின் ரிங்கார்ட் (Martin Rinkart) என்பவர் 1586 ஆண்டு ஏப்ரில் மாதம் 24 ம் நாளாகிய உயிர்த்தெழுந்த பண்டிகைக்குப் பிந்தின 3-ம் ஞாயிற்றுக்கிழமையில் ஐலன்பர்க் (Eilenburg) என்னும் ஊரில் பிறந்தார். இவர் தகப்பனார் சீசாக்களைச் செய்யும் வேலைக்காரர். இவர் கைப்பாடுபட்டுத் தம்முடைய குடும்பத்தைக் கஷ்டத்தோடு ஆதரித்தார். மார்த்தீன் 15 வயதாயிருக்கையில் இவருடைய நிருவாகம் கொஞ்சம் சீரானபோதிலும், இவர் லைப்சிக் சர்வகலாசாலைக்குப்போய் அங்கே வேத சாஸ்திரம் படித்த காலத்தில் தமக்கு வேண்டிய பணத்தைச் சிறுவர்களுக்குப் பாடஞ் சொல்லிக் கொடுத்துச் (Private Tuition) சம்பாதிக்கவேண்டியதாயிற்று. இவர் விசேஷமாய்த் தம்முடைய தாய்க்கு எப்போதும் நன்றியறிந்தவராயிருந்தார். இந்த அம்மாளுடைய விசுவாசமும் உருக்கமுமான ஜெபத்தினாலும், பக்தியுள்ள மாதிரியினாலும் தான் வேதசாஸ்திரப்படிப்பைத் துவக்கவும் இப்படி முடிக்கவும் நேர்ந்ததென்று நியாயத்தீர்ப்பின் நாளிலும் அவர்களைப்பற்றிச் சாட்சி பகர்வேன் என்றார்.

மார்ட்டின் ரிங்கார்ட் பெற்றோர் வீட்டில் தெய்வ பக்தியோடு சங்கீத மனப்பாட பயிற்சி வழங்கியது அவர் மனதை அசைத்தது. இராவில் அவ்வீட்டில் சுரமண்டலத்தோடு பாடலும் தொனித்தது. சங்கீத் சாஸ்திரம் துக்கத்தையும் அதைரியத்தையும் போக்குவதும் நித்தியத்திலும் இருப்பதுமான வித்தையென்பது ரிங்கார்ட்டின் அபிப்பிராயம். கிறிஸ்தவ விசுவாசமும், சங்கீதமும் என்ற இந்தப் பரிசுத்த ஆயுதங்கள் பெரிய பெரிய சோதனைகளையும் மேற்கொள்ளுமென்பதற்கையமில்லை. ரிங்கார்த்துக்கும் உபத்திரவ காலங்கள் வந்துவிட்டன. அவர் வேத சாஸ்திரம் படித்து முடித்த 1617 ஆண்டு முதற்கொண்டு தம்மரண மட்டும் தம் பிறந்த ஊரில் குருவேலை செய்த காலத்தில் 30-வருஷ யுத்தந் துவக்கி முடிந்தது. ஆகையால் அவருடைய தெய்வ ஊழியத்தின் ஆரம்பத்திலும் கடைசியிலுமட்டும் சில மாதங்களாகத் தேசத்தில் சமாதானமிருந்தது. யுத்தத்தினாலுண்டான ஜனச்சேதம் அவரது சபையிலும் பயங்கரமாய் விளங்கிற்று. யுத்தத்தோடு கொள்ளை நோயுங் கூடிக்கொள்ளவே, ஐலன்பர்க் ஊர்ச் சபையிலே 1637 ஆண்டு அடக்க டாப்பில் 3165 பேர் பதிவு செய்யப்பட்டார்கள். கொள்ளை நோயின் மும்முரத்தால் அநேக அடக்கங்களை அவசரப்பட்டுச் செய்ய நேர்ந்தமையால் அவற்றையெல்லாம் டாப்பில் எழுத முடியவில்லை. ரிங்கார்த்து என்ற குருவின் மனைவியும் அந்தப் பெருவாரிக் காய்ச்சலால் இறந்துபோனார்கள். அடுத்த வருஷம் பஞ்சத்தால் வயல் வெளிகளெல்லாம் காய்ந்தும் தீய்ந்தும் போயின. ஊரிலுள்ள குதிரைகளெல்லாம் பட்டணத்துக்குத் தேவையானதால், குடியானவர்கள் தானியதவசங்களை ஏற்றிய வண்டிகளைத் தாங்களே இழுத்துப்போகவேண்டியதாயிற்று. தக்க போசனம் அகப்படாமையால் மனிதர், நாய், பூனை முதலியவற்றின் இறைச்சியையும் சாப்பிட்டார்கள். ஊரதி காரியின் வீட்டுக் கூரையிலிருந்து கீழேசெத்து விழுந்த ஓர் காக்கைக்காகப் பல பேர் சண்டை போட்டார்கள்.

இப்பேர்ப்பட்ட துன்பகாலத்தில் அநேகருக்கு ஆறுதலும் நல்லாலோசனையும் சொல்வது குருக்களின் கடமை. ரிங்கார்த்து இத்தெய்வ ஊழியத்தை உண்மையும் கரிசனமுமாய்ச் செய்தார். 1639ல் தேர்ப்பிலிங்ஙர் (derfflinger) என்ற சுவேதிஷ் படைத்தலைவன் தன் சேனையோடு ஐலன்பர்க் என்னும் ஊரையுந்தாக்கிப் பிடித்து, குடிகள் இலட்சரூபாய் யுத்த அபராதம் செலுத்தவேண்டுமென்றும், செலுத்தத்தவறினால்அவர்களுடைய சொத்தை எல்லாம் சேனையால் பறிமுதல் செய்யப்படும் என்றும் தெரிவித்தபோது, ஏழைக்குடிகளுக்கு அவ்வளவு கொடுக்கக் கூடாமையால், ரிங்கார்த்து அப்படைத்தலைவனிடம் போய் அவர்களுக்காய்ப் பரிந்துபேசினார்: இதினாலும் பயனில்லை யென்று அவர் அறிந்துகொண்டு, சபையாரை நோக்கி: என் பிரிய ஞானப்பிள்ளைகளே, மனிதர் நம்முடைய விண்ணப்பத்தைக் கேட்டு நம்பேரில் கிருபை கூரமாட்டார்கள் என நாம் கண்டோம். ஆண்டவரண்டையில் அடைக்கலம் புகுவோம், ஜெபம் பண்ணுவோம் வாருங்கள் என்று கூப்பிட்டுக் கோயில் மணியை அடிக்கச் சொல்லி ஜெப ஆராதனை வைக்க

ஆலயத்திற்குள் புகுந்தார். அங்கே சிறிது நேரத்தில் சபையார் யாவரும் கூடவே, எல்லாரும் ஏகோபித்து 'மகா இக்கட்டாம் ஆபத்து உண்டால், அடியார் மனது ஓர் யோசனையுமின்றியே கலங்கிக்கொண்டிருக்கச்சே, கர்த்தாவே, மனத்தாழ்மையாய் உம்மண்டை சேர்ந்து, ஏகமாய் அநுக்கிரகத்தைக் கேட்பதே அடியார் 'ஆறுதலாமே' என்று துவக்கும் ஞானப்பாட்டைப் (345) பாடினபின், ரிங்கார்த்து முழுச்சபையோடும் முழங்காற்படியிட்டு ஜெபம்பண்ணி, சனகரிப்பின் சேனை எருசலேமுக்கு வந்தபொழுது எசேக்கியா இராஜா ஜெபித்தவாறு உக்கிரமமாய் ஜெபம் பண்ணினார். படைத்தலைவர் இதைப்பற்றிக் கேள்விப்பட்டு மனதுருகி, அபராதத்தொகையை இருபத்தையாயிரம் ரூபாயாகக் குறைத்தான். பிறகு ரிங்கார்த்து அத்தலைவனுக்கு எஜமானாப்பிருந்தபவர் என்ற சேனாதிபதியிடம் போபச் சபைக்காகப் பரிந்து கெஞ்சவே, இவர் இத்தொகையையும் குறைத்து 6500 ரூபாயாக்கினார். ரிங்கார்த்து தம் சபைக்கு இவ்வித பல உதவிகளைச் செய்தார்.

ரிங்கார்த்து அச்சபையில் வேலைசெய்த 32 வருஷங்களாக விசேஷமாய் ஞானோபதேசப் பிரசங்கங்களைச் செய்தார். இது அவருக்கு அதிகப் பிரியமான வேலை. அதுபற்றி அவர் தம்மைச் சபையின் ஞானோபதேசத் தகப்பன் என்று சொல்லிக்கொள்ளுவார். அவர் பிரசங்கித்த கோவில் அறையிலுள்ள படம் லுத்தருடைய ஞானோபதேசக் குறிப்பிடத்தை அவர் கையில் பிடித்திருப்பதாகக் காட்டும். தமது அந்திய காலத்தில் அவர் பிரசுரித்த 'ஞானோபதேச உபகாரங்கள்' என்னும் பெயர்கொண்ட ஒரு புஸ்தகத்தில் லுத்தருடைய ஐந்து ஆதி நியாயங்களில் அடங்கிய ஞானபொனபொக்கிஷங்களை விவரித்திருக்கிறார். முப்பது வருஷ யுத்தம் முடிந்த அடுத்த வருஷமாகிய 1649 - ம் வருடம் டிசம்பர் மாதம் 8 நாள் அவர் கர்த்தருக்குள் மரித்தார். அவர் மரித்தும், அவர் பாடின ஞானப்பாட்டினால் இன்னும் பேசுகிறார்.

முப்பது வருஷ யுத்தம் முடிந்தபின் உண்டான சமாதானத்திற்காகக் கர்த்தருக்கு ஸ்தோத்திரஞ் செலுத்தவேண்டி, ரிங்கார்த்து என்பவர் **'அதிசயங்களை எல்லா இடமுஞ் செய்யும்'** என்று துவக்கும் ஞானப்பாட்டைப் பாடினார் என்பது நெடு நாளாயுள்ள அபிப்பிராயம். ஆயினும் சரித்திர ஆராய்ச்சியினால் இவ்வெண்ணம் பொய் என்று விளங்கிற்று. 1630-ம் ஆண்டு யுத்தம் மும்முரமாக இருந்தபோதிலும், அகுஸ்தாபுரி விசுவாச அறிக்கை முதலாம் சதோற்சவத்தைக் கொண்டாட வேண்டுமென்று சக்சோனிய தேச நேமகப்பிரபு தம் குடிகளை ஏவித் தைரியப்படுத்தினார்கள். இதற்கொப்ப, அவ்வருஷம் சூன் மாதம் 25 நாள் துவக்கி 27 நாள் மட்டும் ஐலன்பர்க் சபையும் ஆசரித்த பண்டிகை நாட்கள் தம்முடைய ஜீவிய நாட்களெல்லாவற்றிலும் சந்தோஷமுள்ளவையென்று ரிங்கார்த்து பிறகு அறிக்கையிட்டார். அந்தச் சதோற்சவத்திற்காக அவர் இப்பாட்டைப் பாடினாரென்று அனுமானிக்கலாம். 1633ல் ரிங்கார்த்து பிரசுரித்த 'இயேசுவின் இருதயம்' என்னும் சிறு நூலில் அவர் இதையும் வெளியிட்டமையால், அது யுத்த காலத்திற்குள்ளாக உண்டாயிற்றென்பது உண்மை.

ரிங்கார்த்து இப்பாட்டிற்குத் தள்ளுபடி ஆகமங்களைச் சேர்ந்த இயேசு சீராக்கின ஞானம் 50, 24-26ஐ அனுசரித்தார். இப்போதும் நீங்களெல்லோரும் நாலாதிக்கிலும் பெரிய அதிசயங்களைச் செய்து தாயின் வயிற்றில் துவக்கி எங்களைச் ஜீவனோடே காப்பாற்றி, எல்லா நன்மைகளையும் எங்களுக்கு அளிக்கிற கர்த்தரை ஸ்தோத்திரிப்பீர்களாக. அவர் எங்களுக்கு மன ரம்மியமான இருதயத்தைத் தந்து, இஸ்ரவேலுக்குள் நாங்கள் இருக்கிற காலத்தில் எப்போதும் சமாதானங் கட்டளையிடுவராக. இப்படி அவருடைய கிருபை எப்போதும் எங்களோடிருந்து, நாங்கள் நீடித்திருக்க எங்களை இரட்சிக்கக் கடவார் என்று அங்கே எழுதியிருக்கிற வார்த்தைகளைப் பிள்ளைகள் ஒவ்வொரு நாளும் சாப்பாட்டுக்குப்பின் சொல்லும் பழக்கம் ரிங்கார்த்து ஐயருடைய வீட்டிலிருந்தது. இவைகளையே அவர் ஸ்தோத்திரப் பாட்டாக்கினார் 'இயேசுவின் இருதயம்' என்னும் சிறுநூலில் இப்பாட்டிற்கு இன்னமும் 'சாப்பாட்டிற்குப்பின் பாடும் கீர்த்தனை என்னும் தலைப்பு இருக்கிறது. பிறகு இது சுவிசேஷ சபையின் முக்கியமான பிரார்த்தனைகளில் ஒன்றாயிற்று.

கர்த்தரை இருதயத்தில் மட்டுமல்ல, நாவினாலும் ஸ்தோத்திரிக்க வேண்டும் என்பது பல சங்கீதங்கள் கூறும் அறிக்கை (34, 2, 71, 8; 116, 17; 145, 21). எனினும் இந்த ஸ்தோத்திரம் இருதயத்திலும் இராவிடில் அது கர்த்தருக்கு உகந்ததல்ல (மத்.15,8.9). ஆகையால் நாவு, உள்ளம் என்ற இரண்டினாலும் கர்த்தரை ஸ்தோத்திரிப்பதற்கு நாம் இப்பாட்டினால் ஒருவரை ஒருவர் ஏவி, ஒருவராய் அதிசயங்களைச் செய்ய வல்லவராகிய (சங். 72, 18) ஆண்டவரை புகழுகிறோம். பராபரனுடைய மகத்துவ இரட்சண்ய கிரியைகளோடு அவர் தற்காலத்திலும் பொதுப்பட மனுஷ ஜாதியிலும் ஒவ்வொரு விசுவாசியின் தனி ஜீவியத்திலும் விளங்கப்பண்ணும் தயவுகள் எல்லாம் இவ்வித அதிசயங்களாம்.

நம்முடைய, கவியின் இரண்டாம் பகுதியில், நாமுயிரோடிருந்த காலத்தில் அவர் நமக்குச் செய்த இவ்வித ஒத்தாசைகளை விசேஷித்து நினைவு கூருகிறோம். இவ்வார்த்தைகள் எவ்விதமான சந்தோஷ சந்தர்ப்பத்திற்கும் பொருந்துமாகையால், இந்த ஞானப்பாட்டு கர்த்தருடைய ஜெபம்போல் பற்பல சமயங்களிலும் வழங்கப்பெற்றது. இரண்டாம் கவியில் கவிராயர் ஸ்தோத்திரத்தோடு ஓர் விண்ணப்பத்தைச் சேர்த்து தெய்வ பராமரிப்பு, நற்சமாதானம் மன மகிழ்ச்சி, தெய்வ கிருபை முதலியவைகளுக்காக வேண்டிக்கொள்ளும்படிக்கு நம்மை ஏவுகிறார். இந்நன்மைகளெல்லாம் லுத்தர் சாஸ்திரியார் தமது ஞானோபதேசத்தில் விசுவாசப்பிரமாணத்தின் முதல் பிரிவுக்கும், கர்த்தருடைய ஜெபத்தின் 4, 6, 7-ம் மன்றாட்டுகளுக்கும் எழுதின விஸ்தரிப்புகளில் அடங்கியவை.

நற்சமாதானம் இரண்டு விதமாம். புறம்பான சமாதானத்தைக் கர்த்தர் நமக்குக்கொடாவிடினும், அவர் எல்லாப்புத்திக்கும் மேலான தெய்வ சமாதானத்தை நமது இருதயங்களில் உண்டாக்க வல்லவர். மனமகிழ்ச்சிக்கு இக் கவிராயரைப் போல் அப்போஸ்தலரும் (ரோ. 12; 12; 2 கொரி. 6, 10; பிலி. 4, 4; 1தெச 5,16) நம்மைத் தூண்டிவிடுகிறார்கள். நமக்கு நல்ல பரம தகப்பனும் கிருபையுள்ள இரட்சகருமிருந்தும், நாம் அடிக்கடி நமது சிலாக்கியத்தை மறந்து உலக இடையூறுகளினால் துக்கத்திற்குள்ளாவோம் ஆகையால், இந்த உள்ளான

சந்தோஷத்தை நாம் ஓர் தெய்வ வரமாகப் பெற்றுக்கொள்ள வேண்டும். இந்த ஞானப்பாட்டின் கவிகளில் மூன்றாவது மட்டும் சீராக்கின் ஞானம் 50, 24-26 விருந்து எடுக்கப்படாமல், முற்றிலும் புதிய ஏற்பாட்டுக்குரிய பொருளுடையதாம். இது உண்மையும் கிருபையும் நிறைந்த திரியேகக் கடவுளின் முடிவான ஸ்தோத்திரம். இதைப் பாடி உன்னதத்திலும் பூமண்டலத்திலுமுள்ள அவருடைய எல்லாச் சேனைகளோடும் சேர்ந்து நித்திய மோட்ச ஆனந்தத்தின் முன் ருசியை அனுபவிக்கின்றோம்.

ரிங்கார்த்து என்பவர் சங்கீத சாஸ்திரத்தில் மெத்த வரமுள்ளவரும் படிப்பாளியுமாயிருந்தார். அவரது பெற்றோர் வீட்டில் சாயங்காலந்தோறும் பெரியோர் சிறியோரின் கீதவாத்தியங்கள் தொனிக்கும். மார்ட்டின் ரிங்கார்ட் 1601 - ம் வருடம் பதினைந்தாம் வயதில் பெசிர்க் லீப்ஜிக், பட்டணத்திலுள்ள தோமா பாடசாலைக்குப் போனதுமுதல் அவரது இவ்வரம் விசேஷித்து வெளிப்பட்டமையால், அப்பள்ளிக்கூடத்து ஞானப்பாட்டு உபாத்தியாயர் இவரைத் தமக்கு உதவி உபாத்தியாயராக வைத்துக்கொண்டார். அப்போது ரிங்கார்த்து, லுத்தர் செய்தவாறு மற்ற மாணாக்கரோடு வாரத்தில், மூன்று விசை பட்டணத்தில் தெருத்தெருவாய்ப் போய் வீடு வீடாய்ப் பாடித் தமக்கு வேண்டிய பள்ளிக்கூடச் சம்பளம் முதலியவற்றைச் சம்பாதித்துக்கொண்டார். அவர் பிறகு 'அதிசயங்களை' என்னும் பாட்டை உண்டாக்கினபோது, அதின் இராகத்தையும் உண்டுபண்ணினார். கவிகளைப்போல் இந்த ராகமும் பெரியோர், சிறியோர், கற்றோர், கல்லாதோர் யாவரும் சுளுவாய்ப் பாடக்கூடியது. கவிகளையும் இராகத்தையும் மனப்பாடமாய் அறியாத லுத்தரன் கிறிஸ்தவர் மெத்தச் சிலர்.

'கர்த்தர் தான் எங்கள் துர்க்கமும்' என்ற பிரார்த்தனையோடு இந்த ஞானப்பாட்டும் லுத்தரன் சபையில் மற்றெல்லா ஞானப்பாடல்களிலும் அதிகமாய் வழங்குகிறது. அது கர்த்தர் பிறந்த பண்டிகை முதலிய பெரிய பண்டிகைகளிலெல்லாம் தொனிக்கும். 1757 ஆண்டு டிசம்பர் மாதம் 5 ம் நாள் லைத்தென் (Leuthen) ஊர் அருகாமையில் நடந்த பெரிய சண்டைக்குப்பின் ஜெயங்கொண்ட 32,000 பேருடைய சேனையில் ஒருவர் இப்பாட்டைப் பாடத் துவக்கினபோது, முழுச்சேனையுங்கூடப் பாட இதின் சத்தம் இடிமுழக்கம்போல் தொனித்தது. இப்போதிருக்கிற பெரிய யுத்தத்திற்குப் பின்னும் சமாதானப் பிரியர் யாவரும் இதினால் கர்த்தரைப்போற்றிப் பாடத் தகும். இரத்தஞ் சிந்துதலையும் பாழாக்குதலையும் பற்றிய செய்திகள் அதிகமதிகமாய் நம் காதுகளில் விழும் இக்காலத்தில் இவ்வித சந்தோஷக் கீர்த்தனைகளைப் பாடலாகாதென்று நாம் நினைக்கக் கூடும். ஆகிலும் பெருந்துயரத்திற்குள்ளானவர்களுங் கூடத் தங்களுக்கு நேரிட்ட இக்கட்டுகளைப் பார்க்கிலும் கர்த்தர் தங்களுக்குச் செய்கிற உபகாரங்கள் அதிகமென்று அறிக்கையிட வேண்டும். ஆகையால் உலகமெல்லாம் தவிக்கும் இக்காலத்தில், தெய்வச்செயலாலும் நல்ல அதிகாரிகளின் தயவாலும் அநேக உபகாரங்களை அனுபவிக்கிற நாம் கர்த்தரைக் கீர்த்தனம் பண்ணிப் புகழவேண்டியது நமது கடமை. நாம் இன்ப நாட்களிலும் துன்ப நாட்களிலும் இப்பாட்டை அவரது நாம மகிமைக்கென்று பாடுவோமாக.

## சந்திப்பு

1865 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட பேசல் மிஷன் டைல்ஸ்யை (Basel Mission tile works 1865) வரலாற்று அறிஞர் நீலமலை மதிசுடர் அருள்திரு.பிலிப் K மல்லி ஐயா அவர்கள் கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கத்திற்க்கு அன்பளிப்பாக வழங்கினார்கள். அருகில் அருள்திரு.தேவராஜ் ஐயா மற்றும் ஆல்வின் ஜேக்கப் அவர்களையும் வரலாற்றுச் சங்கத்தின் சார்பாக நீலகிரி மாவட்ட வரலாற்றுச் நினைவிடங்களையும் ஆலய வரலாறுகளையும் எங்களுடன் வந்து பகிர்ந்து கொண்டார்கள்.

ஏற்கனவே பல நூல்களை பாதுகாக்க வேண்டி வரலாற்று சங்கத்திற்கு அன்பளிப்பாக கொடுத்துள்ளார்கள் என்பது கூடுதல் தகவல் வரும் நாட்களில் அதை காட்சிப்படுத்த திட்டமிட்டுள்ளோம். அனேக பணி நிறைவு பெற்ற குருவானவர்கள் தொடர்ந்து நமக்கு கொடுத்து வரும் ஆதரவுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.



Rev.P. K. Mulley



Rev. D. Prabhu Chandramohan



Rev. Arul Prakash

# உன் கோவில்

## கோவில் கட்டடத்தின் பூர்வ சரித்திரம்.

J. S.







எருசலேம் பட்டணத்திலிருக்கிற பெரியகோவிலைத் தவிர ஆதிக்கிறிஸ்தவர்களுக்கு வேறே ஆலயமில்லை. (அப்.2.46). அவர்கள் கோவில் வேண்டாமென்றிருந்ததில்லை. மேலானவர்கள் அவர்களைத் துன்பப்படுத்தினதினால், அவர்கள் சொந்தக் கோவில் கட்டச் சக்தியில்லாமல் தனி வீடுகளில் ஆராதனைகளுக்கு சேர்ந்து வந்தார்கள்,

அவ்வாறு இயேசு பரத்துக்கு ஏறின பிறகு அப்போஸ்தலர் மேல் மாடியிலிருக்கிற ஒரு அறையில் ஒருமனப்பட்டவர்களாய் ஜெபம்பண்ணினார்கள். (அப். 1. 12 முதல்) அந்த அறையிலாவது அதைப்போன்ற அறையிலாவது பெந்தேகோஸ்தே நாளில் சீஷர்கள் கூடியிருந்தார்கள். (அப்.2. 1 முதல்) ஆதிக் கிறிஸ்தவர்கள் - ஜெபத்துக்கும் ஆராதனைக்கும் அடிக்கடி கூடின இன்னொரு ஸ்தலம் மாற்குவின் தாயாகிய மரியாளின் வீடு (அப்.12.12). காவல் பண்ணப்பட்ட பேதுரு ஆச்சரியமான விதமாய் விடுதலையாகி வந்து அநேகர் அங்கே ஜெபத்திற்குக் கூடியிருப்பதைக் கண்டான். அப் 4.31, ரோ. 16.5; கொலோ. 4. 15; 1 கொரி.16.19.20; பிலோமோன்.2 ஒத்துப்பார். ரோமாபுரியில் பவுல் அப்போஸ்தலர் வாடகைக்குப் பிடித்த ஒரு வீட்டில் இரண்டு வருஷம் குடியிருந்து; பராபரனுடைய இராச்சியத்தைப் பிரசங்கித்து, கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவைப் பற்றித் தைரியமாய்ப் போதித்தார். அப். 28.30.

கிறிஸ்தவர்கள் இரண்டாம் நூற்றாண்டின் கடைசியில் ஆராதனைக்கென்று தனி வீடுகளையும் அறைகளையும் கட்ட ஆரம்பித்தார்கள்.

அந்தியோக்கியாவின் இக்னேஷியஸ் (Ignatius of Antioch+ AD 115) தம் காலத்துக்கு முன்னும் சில இடங்களில் அப்பேர்ப்பட்ட




வீடுகளைக்கட்ட ஆரம்பித்தார்களென்று காட்டுகிறார்.

அவ்வாறு இரத்த சாட்சியாகிய ஜஸ்டின் (Justin Martyr + சுமார் 165) சூரியன் பேரால் அழைக்கப்பட்ட நாளில் (ஞாயிற்றுக்கிழமையில்) பட்டணங்களிலும் நாட்டிலுமுள்ள கிறிஸ்தவர்கள் ஒரு இடத்தில் சேருகிறது வழக்கம் என்று எழுதுகிறார்.

டெர்டுல்லியன் (Tertullian- AD 220) பிரத்தியேகமான ஆராதனை ஸ்தலங்கள் உண்டென்பதைத் தெளிவாய்க் காட்டுகிறார். ஞானஸ்நானக்காரர் ஞானஸ்நானம் பெறுகிறதற்குத் தெய்வாலயத்தில் கூடிக் கூட்டமாக ஆற்றுக்கும் போனார்களென்று காட்டுகிறார். கோவில் அடிக்கடி புறாவின் வீடு என்று இவரால் சொல்லப்படும். பரிசுத்த ஆவியானவர் அங்கே விசேஷித்த பிரகாரமாக இறங்கிக் கிரியை செய்கிறார் என்பதும் கிறிஸ்தவர்கள் கபடில்லாத புறாக்களைப்போல் புசல், துன்பம், விரோதிகள் முதலியவைகளுக்குத் தப்ப அங்கே அடைக்கலம் புகலாம் (சங் 55.7,9) என்பதும் அதின் கருத்தாம்.

அக்காலத்தில் கிறிஸ்தவர்களுக்கு பிரத்தியேகமான ஆராதனை ஸ்தலங்கள் இருந்தனவென்று பின்வரும சரித்திரத்தினாலும் விளங்கும். சற்குணனாகிய செவரஸ் அலெக்சாண்டர் (Severus Alexander 222-235) என்கிற சக்கரவர்த்தி ரோமாபுரியில் ஆளுகை செய்கையில் கெட்ட நோக்கமாக உபயோகிக்கப் பெற்ற ஒரு வீட்டைப்பற்றிக் கிறிஸ்தவர்களுக்கும் சில கள்ளுக் கடைக்காரருக்கும் சண்டையுண்டானது. இரு கட்சிக்காரரும் அதைத் தங்கள் வேலைக்காக விரும்பினார்கள். சக்கரவர்த்தியின் தாய் ஜூலியா அவிட்டா மாமியா என்பவள் Julia Avita Mamaea) கிறிஸ்து மார்க்க சார்புள்ளவளாயிருந்தாள். சக்கரவர்த்தியோ புறமதஸ்தன், ஆகிலும் இந்த வீட்டைக் கள்ளுக்கடைக்காரருக்கு ஒப்புவிக்கிறதை விட ஆராதனை ஸ்தலமாக உபயோகிப்பதே நலமென்றும் ஆராதனை செய்வோர் கிறிஸ்தவர்களாயினும் அவர்களுக்கே கொடுக்கத்தகும் என்றும் தீர்த்தான்.

மூன்றாம் நூற்றாண்டில் கிறிஸ்தவர்கள் அநேக அழகான கோவில்களைக் கட்டினார்கள். நாலாம் நூற்றாண்டின் துவக்கத்தில் தியோக்கிளேசியான் என்கிற சக்கரவர்த்தி கிறிஸ்தவர்களை அதிகத் துன்பப்படுத்தும்போது நிக்கோமேதியா பட்டணத்திலிருந்த பெரிய ஆலயத்தையும் வேறே ஆலயங்களையும் இடித்து விட்டான்.

கான்ஸ்டான்டின் சக்கரவர்த்தி அநேக ஆலயங்களைப் புதிதாய்க் கட்டி அந்தியோகியா, நிக்கமேதியா, தீரு, கான்ஸ்டான்டிநோபில், ரோம் முதலிய இடங்களில் இடிந்துபோனவைகளைப் புதுப்பித்தான், கிறிஸ்துவின் சமாதி என்று என்னப்பட்ட இடத்தில் ஒரு கோயிலையும் கட்டினான். அவன் தாயாகிய எலேனாள் பெத்லகேம், ஒலிவமலை, கொல்கதா முதலிய இடங்களில் ஆலயங்களைக் கட்டினாள்.

முதலாம் ஜஸ்டினியன் என்ற சக்கரவர்த்தி (Justinian I, 527- 565) இவ்விஷயத்தில் அதிக வைராக்கியத்தைக் காட்டி இரத்த சாட்சிகள், அர்ச்சியசிஷ்டர், கன்னிமரியாள் முதலியோரை நினைக்க எருசலேம், கான்ஸ்டான்டிநோபில் முதலிய இடங்களில் அநேக தெய்வாலயங்களைக் கட்டினான், 562ம் வருஷம் தான் குடியிருந்த கான்ஸ்டான்டிநோபில் பட்டணத்தில் பரிசுத்த சொபியா (ஞானம் என்ற) ஆலயத்தைக் கட்டிப் பிரதிஷ்டை பண்ணினபோது அது சாலமோன் ஆலயத்திலும் சிறந்தது என்று அவன் நினைத்து, சாலமோனே! உன்னை மேற்கொண்டேன் என்று கூப்பிட்டானாம். அந்த ஆலயமோ இப்போது முகமதியருடைய விசேஷித்த கோவிலாயிருக்கிறது.

4ம் நூற்றாண்டிலும் அதுக்குப் பின்னும் கிறிஸ்தவர்கள் அநேக புறமதக் கோவில்களை மாற்றிக் கிறிஸ்தவ உபயோகத்திற்குக் கொண்டுவந்திருக்கிறார்கள். ரோமாவிலுள்ள விசேஷித்த ஒரு அஞ்ஞான கோவில் 610ம் வருஷத்தில் சக்கரவர்த்தியினால் 4-ம் பொனிபாசியு என்ற பாப்புவுக்குத் திருச்சபை உபயோகத்துக்கென்று ஒப்புக்கொடுக்கப்பட்டது. பாப்புப் பல அஞ்ஞான அருவருப்புகளை யெல்லாம் தெய்வமாதாவுக்கும் கிறிஸ்துவின் சகல இரத்த சாட்சிகளுக்கும் ஆன கோவில்களாகப் பிரதிஷ்டை பண்ணினான். அக்காலத் துவக்கி அந்நாளாகிய நவம்பர் 1 ம் தேதி சகல அர்ச்சியசிஷ்டவரன்களின் நாளாகத் திருச்சபையில் கொண்டாடப்பட்டு வருகிறது. 1517ம் வருஷத்தில் அந்தப்பண்டிகை கொண்டாட விட்டென்பர்க் பட்டணத்திற்கு வந்தவர்களுக்குத் தான் அத்தர் அதுக்கு முந்தின நாளாகிய அக்டோபர் 31ம் தேதியில் தமது 95 நியாயங்களைக் கோவில் கதவில் ஆணி கடாவினார்,

கிரேக்கருக்கும் ரோமருக்குமிருந்த கோவில்கள் வெகு அழகான கட்டடங்களாயிருந்தன. ஆதிக் கிறிஸ்தவர்களின் ஆலயங்களோ பொன் வெள்ளி கோபுர சொரூப அலங்காரமின்றி இருந்தன. இதுபற்றி தெர்த்துல்லியான் நமது புறாவின் வீடு அற்பமானது என்றார். இரத்த சாட்சிகளின் ஆலயங்கள் எப்படி அழகாயிருக்கக்கூடும்? அவர்களே ஏழைகளும் துரத்தப்பட்டவர்களும் அடிக்கடி மரணத்துக் கேதுவானவர்களுமாயிருந்தார்களே. அவர்கள் இருதய சந்தோஷாநுபவம் மேலான விஷயங்களைத் தாவியிருந்தது. ஆகையால் அவர்கள் உலகம் தரக்கூடாத சமாதானத்தை உடையோராயிருந்தார்கள்.

கோவிலில்லாத அக்காலக் கிறிஸ்தவர்களைப் புறமதஸ்தர் கேவலமாகப் பேசினார்கள். ஆனால் அவர்கள் (எபி.11.10) பராபரன் கட்டி உண்டாக்கின அஸ்திபாரங்களுள்ள பட்டணத்துக்குக் காத்திருந்தார்கள்.

அவர்கள் ஆலயங்கள் கேவலமாயிருந்தும் அவை அழகான புறமத ஆலயங்களை விட விசேஷித்த மகிமையுள்ளனவாயிருந்தன. விசுவாசிகள் ஜெபம்பண்ணக்கூடும் இடத்துக்கு விசேஷித்த கிருபையும் மகிமையுமுண்டு: ஏனெனில் விசுவாசிகளோடே தேவதூதர்கள் இருக்கிறதுமன்றி நமது ரட்சகராகிய கர்த்தரே நித்திரையடைந்த பரிசுத்தவான்களின் ஆவியோடு கூட இருக்கிறாரென்று ஆரிஜெனஸ் (Origenus 254) சொல்லுகிறார்.

ஆதிக் கிறிஸ்தவர்கள் சமாதான காலங்களில் விசேஷமாய்த் தங்கள் தேவாலயங்களைக் கட்டினார்கள். 260-270 வருஷம் வரை நல்ல சமாதானமிருந்ததினால் அநேக ஆலயங்கள் அப்போது கட்டப்பட்டன. துன்பம் மறுபடியும் ஆரம்பிக்கும் போது அவைகளில் பல இடிக்கப்பட்டன. டியோகி லேசியான் சக்கரவர்த்தி 303-11 வரையில் கிறிஸ்தவர்களைப் பலமாய்த் துன்பப்படுத்தும்போது ரோமாவில் மாத்திரம் 40 ஆலயங்களுக்கு மேல் இடிக்கப்பட்டன.

தூத்தப்பட்ட கிறிஸ்தவர்கள் நாட்டிலும் காட்டிலும் வனாந்தரத்திலும் சிறைச்சாலைகளிலும் சாப்பாட்டுக் கடைகளிலும் கப்பல்களிலும் கல்லறைகளிலும் பூமிக்குக் கீழேயும் தங்கள் ஆராதனைகளை நடத்தினார்கள். விசேஷமாய் ரோமாபுரியில் பூமியின் கீழிருக்கிற காற்றகோம் என்னும் விஸ்தீரண இடங்கள் கல்லறைத்தோட்டமாகவும் ஆராதனை ஸ்தலமாகவும் உபயோகிக்கப்பட்டன.

4ம் நூற்றாண்டோடு திருச்சபைக்குச் சமாதானம் கிடைத்தது. அப்போது கிறிஸ்தவர்கள் தங்கள் ஆலயங்களை மிகவும் சிறப்பிக்க ஆரம்பித்தார்கள். ஆயினும் பழைய அஞ்ஞானச் கோவில்களும் புதுக் கிறிஸ்தவக் கோவில்களும் அதிக வித்தியாசமாயிருந்தன. அஞ்ஞானக்கோவிலில் தொழுதுகொள்ளுகிறவன் சிலையான தேவர்களைக் கவனித்தான். கிறிஸ்தவக் கோவிலிலே தொழுதுகொள்ளுகிறவன் தன் இருதயத்தை உலகத்துக்கும் அதின் மாய்கைக்கும் மேலாகப் பரத்தில் வாசமாயிருக்கிறவரும், தம்மை உண்மையாய்த் தேடுகிறவர்களை அங்கு இழுக்கிறவருமான கடவுளண்டை ஏறெடுப்பான். இதற்கிசையக் கிறிஸ்தவர்கள் தங்கள் ஆலயங்களைக் கட்டினார்கள். கிறிஸ்தவக் கோவில் சிலைக்காக ஏற்பட்ட ஒரு இருட்டதையுமல்ல, சுவரில்லாத ஒரு வெளிமண்டபமுமல்ல, பெரிய ஜன்னல்கள் மூலமாய் வெளிச்சம் தாராளமாய் நுழைந்தும் புறம்பான கூக்குரல்களும் சந்தடிகளும் தடைப்படச் சுவர்கள் உள்ளவை. ஆலயத்தின் ஒவ்வொரு பாகமும் ஒரு Sarsam Curda அதாவது 'இருதயங்களை மேலாக ஏறெடுங்கள்' என்று நமக்குச் சொல்லவேண்டும். உன் கோவில் ஒருவேளை அற்பமாயிருந்தும் உனக்கு ஒரு Sarsam Curda அதாவது 'உன் இருதயத்தைப் பராபரனுக்கு ஏறெடுத்துக்கொள்' என்று சொல்லக் கூடும்.



Dr.Rev. Suresh Rajan Mrs. Ida Grace



Mr.Abraham Rajasekar



Mr.P.Stephen iyya



Rev Victor Prem Kumar

## கோவையில் வரலாற்றுச் சங்க உறுப்பினர்களை சந்தித்த பொழுது

# சங்க பணிகளுக்காக ஜெபித்துக்கொள்ளுங்கள்

**கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கத்தின் அன்பின் வாழ்த்துக்கள்.**

பூர்வ நாட்களை நினை; தலைமுறை தலைமுறையாய்ச் சென்ற வருஷங்களைச் கவனித்துப்பார்; உன் தகப்பனைக் கேள், அவன் உனக்கு அறிவிப்பான், உன் மூப்பர்களைக் கேள், அவர்கள் உனக்குச் சொல்லுவார்கள். உபாகமம் 32.7

ஒருங்கிணைந்த திருநெல்வேலி திருச்சபை உருவாகி சுமார் இரண்டரை நூற்றாண்டுகளாகின்றன. பராபரனின் பெரிதான கிருபையினால் இன்று திருமண்டலங்களாகவும், பல நூறு திருச்சபைகளாகவும் பெருகி வந்து கொண்டு இருக்கின்றது. பராபரனுக்கு ஸ்தோத்திரம். திருச்சபை சரித்திரத்தை அறிய வேண்டிய அவாவும் மக்கள் மனதில் அதிகரித்துக்கொண்டே இருக்கின்றது. இந்நிலையில் **'யார் நமது காரியமாய் போவான்,' இதோ அடியேன் இருக்கின்றேன், என்னை அனுப்பும்'** என்று ஏசாயா தீர்க்கன் முன் வந்தது போல திருநெல்வேலி வரலாற்றை மீள் பதிப்பு செய்யவும், வரலாற்று பணிகளை கள ஆய்வுப் மேற்கொள்ளவும், நின்றுபோன வரலாற்று **'தொடரோட்டத்தை தொடரவும்'** கடவுளால் தெரிந்துகொள்ளப்பட்ட இயக்கமே **' கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்'**

**கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்** தமிழ் கிறிஸ்தவ வரலாற்று ஆய்வாளர்கள் பலரின் அரும்பெரும் முயற்சியினால் தொடங்கப்பட்டது. நம்முடைய வரலாற்றுச் சங்கத்தின் தரிசனத்தில், இறையியல் கல்லூரி மாணவர்கள் பலர் தன்னார்வத்தோடு தங்களையும் இணைத்து செயல்பட்டு வருகிறார்கள். மேலும் தமிழ்நாடு முழுவதும் உள்ள பல வரலாற்று ஆய்வாளர்களுடன் கைகோர்த்து இப்பணியைச் செய்து வருகின்றோம்.

வரலாற்றுச் சங்கமானது கடந்த ஐந்து ஆண்டுகளாக உங்களுடைய ஜெபத்தினாலும் பேராதரவினாலும், மிகச்சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. நமது பத்து அம்ச திட்டங்களில் மாத ஆய்விதழ், பழைய புத்தகங்கள் சேகரித்தல் மற்றும் டிஜிட்டல் செய்யும் பணி, புத்தக மறுப்பதிப்பு பணிகள், நூலகப் பணிகள், மிஷன் சுற்றுப்பயணம், புத்தக வனம் இணைய செயலி, ஆவணப்படம் தயாரித்தல், மிஷன் அருங்காட்சியகம், ஆய்வுக் கருத்தரங்கம் போன்ற பணிகளை கடந்த ஆண்டுகளில் செய்து வருகின்றதை நீங்கள் அறிந்ததே.

இந்த ஆண்டிலும் வரும் ஆண்டுகளிலும் நமது இலக்குகளை அதிகப்படுத்தி இருக்கின்றோம். குறிப்பாக **புத்தக மறுப்பதிப்பு, நூலக கட்டிட பணிகள், மிஷன் அருங்காட்சியகம்** மேற்கண்ட பணிகளை செய்ய வேண்டிய தேவையில் இருக்கின்றோம். இப்பணிகளில் நீங்கள் குடும்பமாகவோ, இயக்கமாகவோ அல்லது தனி நபராகவோ இணைந்து செயல்படவும் பங்கு பெறவும் அன்புடன் அழைக்கின்றோம்.

**நம் சங்கத்தின் பத்து அம்ச செயல்திட்டத்தை நினைவுபடுத்துகின்றோம்:-**

தமிழ் கிறிஸ்தவ வரலாற்றில் நீண்ட இடைவெளிக்கு பின்பு மீண்டும் ஒரு வரலாறு படைத்துக் கொண்டு இருக்கும் மாத ஆய்விதழ் தான் **'கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்'**. கடந்த 2020ம் ஆண்டு ஜூன் மாதம் முதல் ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு தலைப்பைக் கொண்டு பல்வேறு அரிய ஆய்வுக் கட்டுரைகளோடு மிக சிறப்பாக வெளி வந்து கொண்டிருக்கிறது. **மறைக்கப்பட்ட, மறந்த, மறைந்த** மிஷனெரிகள் மற்றும் திருச்சபை வரலாறுகள், கள ஆய்வுகள், பல்வேறு அரிய வரலாற்று பொக்கிஷங்களுடன் தமிழகம் முழுவதும் தொடர்ந்து 1530 க்கு மேற்பட்ட வாசகர்களுடன் வந்து கொண்டு இருக்கின்றது.

- காலவோட்டத்தில் அறுபட்டுக்கிடந்த இசைத் தமிழ் கண்ணிகளைத் தற்கால இசைத் தமிழ் உலகுக்குக் கோர்த்துக் கொடுத்த மாபெரும் இசைத் தமிழ் அறிஞர் தஞ்சை ஆபிரகாம் பண்டிதர் அவருடைய அளப்பரிய செயல்களை நினைவுகூறும் வகையில் **ஆபிரகாம் பண்டிதர் நினைவு மின்னனு ஆராய்ச்சி நூலகம்** நம்முடைய சங்கத்தின் சார்பில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆபிரகாம் பண்டிதர் நினைவு ஆராய்ச்சி நூலகமானது தமிழ் கிறிஸ்தவ மின்னனு நூலகத்தில் **முதல் நூலகம்** என்ற சிறப்பைப் பெற்றது. இந்த நூலகமானது தமிழ் கிறிஸ்தவ வரலாற்று ஆய்வாளர்களுக்கும், எழுத்தாளர்களுக்கும், தமிழ் கிறிஸ்தவ ஆராய்ச்சி மாணவர்களுக்கும் பயன்படும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. தமிழ் கிறிஸ்தவ வரலாற்றில் ஒரு புதிய மைல் கல்லாகவும் அமையும். மேலும் அநேக புதிய தமிழ் கிறிஸ்தவ எழுத்தாளர்களை உருவாக்கவும், ஆராய்ச்சியாளர்களை உருவாக்கவும் இது உதவியாக இருக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.
- வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த, மறுபதிப்பு செய்து வெளியிடப்படாத கிறிஸ்தவ மிஷனெரிகளின் வாழ்க்கை வரலாறு புத்தகங்களை மறுபதிப்பு செய்து வருகின்றோம். குறிப்பாக நெல்லை திருமண்டல வரலாற்று அறிஞர் பேராசிரியர் அருள்திரு **தே.அ. கிறிஸ்துதாஸ் ஐயர்** அவர்களுடைய படைப்புகளை மறுபதிப்பு செய்து இன்றைய தலைமுறைகளுக்கு கொண்டு செல்லவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றோம். குறிப்பாக கடந்த ஆண்டு பேராசிரியர் அருள்திரு தே.அ. கிறிஸ்துதாஸ் ஐயர் அவர்களின் வரலாற்று சிறப்புமிக்க புத்தகம் அனைத்தையும் மறுபதிப்பு செய்து வருகின்றோம்.

- நம்முடைய வரலாற்று சங்கமும் கிறிஸ்தவ ஆய்வு மற்றும் ஆவணப்படுத்து மையமும் இணைந்து **'புத்தக வனம்'** செயலி செயல்பட்டுக் கொண்டு இருக்கின்றது. இந்த செயலி தமிழகத்தில் முதல் முறையாக டிஜிட்டல் முறையில் கையடக்க வடிவில் புத்தகமாக முழு நூலகமாக உங்கள் கைகளில் கொடுத்துள்ளோம். இன்னும் பல ஆயிரம் புத்தகங்களை பதிவேற்றும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. மேலும் பேராசிரியர் அருள்திரு தே.அ. கிறிஸ்துதாஸ் ஐயர் பெயரிலேயே **நினைவு புத்தக அங்காடி** ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- தமிழக வரலாற்றில் கிறிஸ்தவ மிஷனெரிகளுடைய பங்கு குறிப்பிடத்தக்கது. அந்த மிஷனெரிகள் பணி செய்த இடங்கள், அவர்களுடைய நினைவிடங்கள், தங்கியிருந்த இல்லங்கள், கல்லறைகள், வரலாற்று சிறப்புமிக்க ஆலயங்கள், இரத்த சாட்சிகளாக மரித்த மிஷனெரிகள் பணி செய்த மற்றும் தங்களை இரத்த சாட்சியாக ஒப்புக்கொடுத்த இடங்களை தெளிவான முறையில் பார்வையிடவும், வெளியிடங்களிலிருந்து வரும் மக்களின் வசதிக்காகவும் **Mission Tourist Map** என்று செயலி உருவாக்கி அதன் மூலம் அவர்கள் தங்குமிடங்கள், வழித்தடங்கள் அடங்கிய மின்னியல் கையேடு அமைப்பது.
- வரலாற்றின் பக்கங்களில் மறைந்து கிடக்கும் கீர்த்தனை கவிஞர்கள், உபதேசிமார்கள், முன்னாள் குருமார்களுடைய வரலாற்று பொக்கிஷங்களை சேகரித்து வருகிறோம். மேலும் அவர்களுடைய வரலாற்றுத் தகவல்கள், அவர்களால் உருவாக்கப்பட்ட திருச்சபைகள், கிறிஸ்தவ பாடல்கள் உருவாக்கம் பெற்ற வரலாறுகள், பாடல்களின் வரலாறுகளையும் சேகரித்து அதை மின்னியல் முறைக்கு மாற்றும் பணிகளையும் செய்து கொண்டு இருக்கின்றோம்.
- தமிழ் கிறிஸ்தவ பழைய புத்தகங்களை சேகரித்து மின்னியல் முறையில் ஆபிரகாம் பண்டிதர் நினைவு ஆராய்ச்சி நூலகத்திலும், பேராசிரியர் **அருள்திரு தே.அ. கிறிஸ்துதாஸ் ஐயர் நினைவு புத்தக அங்காடி**யிலும் பதிவேற்றம் செய்வதுடன் புத்தகங்களை தமிழ் கிறிஸ்தவ வரலாற்று ஆய்வாளர்களுக்கும், எழுத்தாளர்களுக்கும், ஆராய்ச்சி மாணவர்களுக்கும் பயன்படும் விதமாக ஒரு சிறந்த ஆய்வு நூலகம் அமைக்கவும் முயற்சிகளும் மேற்கொண்டு வருகிறோம்.
- மிஷனெரிகளின் வாழ்க்கை வரலாற்று சம்பவங்களை அடிப்படையாக கொண்டு ஆவணப்படங்களை வெளியிடுவதற்கான முயற்சிகள் செய்து கொண்டு இருக்கிறோம். கர்த்தருக்கு சித்தமானால், வருகிற ஆண்டு **கிளாரிந்தா, ஏமி கார்மைக்கேல்** மிஷனெரிகளின் வரலாற்றை ஆவணப்படமாக்க திட்டமிட்டிருக்கிறோம்.
- தங்களுடைய வசதியான வாழ்வை தியாகம் செய்து நம் நாட்டிற்கு வந்து கோதுமை மணிகளாய் விதைக்கப்பட்ட மிஷனெரிகள் மற்றும் தன் சொந்த மக்களுக்காக தங்களையே அர்ப்பணித்த நம் இந்திய மிஷனெரிகளின் நினைவிடங்கள் மற்றும் கல்லறைகளை கண்டறிவதுடன் திருச்சபையுடன் இணைந்து பராமரித்து அவர்களுடைய தியாகங்களை குறித்த விழிப்புணர்வை திருச்சபை மக்களுக்கு ஏற்படுத்த பணியாற்றி வருகிறோம்.
- வரலாற்றுச் சங்கம் சார்பில் மிஷனெரிகள் பயன்படுத்திய கலை பொருட்கள் மற்றும் புத்தகங்கள், பைபிள், சேகரித்து வரலாற்று **அருங்காட்சியகம்** அமைக்கும் பணியில் ஈடுபட்டிருக்கிறோம். மிஷனெரிகள் பயன்படுத்திய பொருட்களை சேகரித்து வருகிறோம்.
- கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம் மற்றும் மேய்ப்பரின் பயிலகம் சார்பாக கடந்த இரண்டு மாதமாக இணையதள **சீர்திருத்த தமிழ் திருச்சபையின் ஆரம்பங்கள்** என்ற தலைப்பில் ஒவ்வொரு மாதமும் இரண்டாவது செவ்வாய்கிழமைகளில் இரவு ஏழு முப்பது மணிக்கு நடைபெற்று வருகின்றன.

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, கடந்த 2017ம் ஆண்டு அற்பமாக ஆரம்பிக்கப்பட்ட நம்முடைய திருநெல்வேலி **கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்** இது வரையிலும் பல்வேறு தடைகளையும், நெருக்கடிகளையும் கடந்து வந்திருக்கிறது. வரலாற்று ஆய்வாளர்கள், ஆசிரியர்கள், வாசகர்கள், நண்பர்கள், நலன் விரும்பிகள் ஆகியோருடைய இடைவிடா ஜெபத்தாலும், ஆதரவாலும், உதவியாலும் நம் திருநெல்வேலி கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. மேலும் நம்முடைய மாதாந்திர ஆய்விதழும் தடைகளின்றி வெளி வருகிறது. நம்முடைய கிறிஸ்தவ வரலாற்றுச் சங்க செயல்பாடுகள் சிறப்பாக அமைய ஜெபத்தாலும், உடலுழைப்பாலும், பொருளாதார வழியிலும் உதவி வரும் அத்துணை நல்லுள்ளங்களுக்கும் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம். தொடர்ந்து நாம் செயல்பட வேண்டிய தளங்கள் அநேகமுண்டு. இணைந்து செயல்பட அன்புடன் அழைக்கிறோம். வரலாற்றுச் சங்கத்தின் ஓர் அங்கமாக வரலாற்றை அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்லும் கருவியாவோம். சர்வ வல்லமை கொண்ட ஆண்டவரின் ஆயுதமாவோம்.

christianhistoricalsociety.in/
tchsportal.co.in




Yearly Subscription

600

christianhistoricalsociety.in

Apply Now

Monthly Magazine for church history

Return Requested:

To

Tamil Printed Book- For Private Cirulation Only

**CHRISTAVA VARALATRU SUVADUGAL**
# 2.2.3(4)North Street,
Bungalow Surandai-627859.
Tenkasi District
Tamil Nadu
Ph: 04633 290401
Mo: **91767 80001**

Owned & Published By CHRISTIAN HISTORICAL SOCIETY, Tamil Eduction- For Private Cirulation Only
Editor|G.MUTHAIAH SELVAKUMAR| at 2.2.3(4)North Street, Bungalow Surandai-627859. Tenkasi District Ph: 04633 290401